

அறிஞர்

# அண்ணா

# சொன்ன

1   

# நகைச்சுவை கதைகள்

# அறிஞர்
# அண்ணா சொன்ன
# 100
# நகைச்சுவைக் கதைகள்


தொகுத்தவர் :

வெ. பார்த்திபன்



கிடைக்குமிடம் :

ராமன் பதிப்பகம்

சென்னை-18

மறு பதிப்பு: 1970

விலை ரூ. 2-00

முத்து வெளியீடு

தோடுகுளம்

மூவேந்தர் அச்சகம், 37, சி. டெ. ச. தெரு, சென்னை-14.

அண்ணாவைப்பற்றி ரா. பி. சேதுப்பிள்ளை

# அண்ணா ஒரு மருத்துவர்

இளந்தமிழுலகத்தில்—எழுகின்ற தமிழகத்தில்—இன்று 'அண்ணா' என்று அருமையாக அழைக்கப்படுகின்றவர் தோழர் திரு. அண்ணாதுரை. அவர் ஆயிரம் மேடை ஏறிய அறிஞர்; பல்லாயிரம் மக்களின் உள்ளத்தை ஒருங்கே கவரும் சீரிய கூரிய சொல்லாளர்; கண்ணினின்று கண்ணறச் சொல்லும் திண்ணியர்.

அண்ணாதுரை கலையறிந்தவர். தமிழ் நாட்டின் பழைய நிலையறிந்தவர். "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்று மார்தட்டிக் கூறிய வீரர் வாழ்ந்த தமிழகத்தில் இன்று கோழைகளாய், மோழைகளாய் நாம் குன்றலாகாது; காளைகளாய்க் களிறுகளாய் வாழ்தல் வேண்டும் என்று ஆசைப் படுகின்றவர் அவர்.

தமிழ்க் குலத்தை அழிக்கும் வேர்ப் புழுக்களை அழித்தாலன்றித் தமிழகம் தழைக்குமாறில்லை; ஊழ்வினையே பேசி ஆள்வினை அற்றிருக்குமளவும் நாம் உய்யுமாறில்லை என்று உறுதியாகக் கருதுகின்றவர் அவர்.

தமிழ்நாட்டைப் பிடித்த பீடைகள் ஒழிய வேண்டுமாயின், "நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்று வள்ளுவர் வகுத்த மருத்துவ முறையைத் தயங்காது தமிழர் கையாளுதல் வேண்டும் என்பது அவர் கொள்கை. புண்ணுற்ற மேனியைப் புறம் பொதிந்து மூடுதலால் என்ன பயன்? என்பது அவர் கேள்வி.

பதிநலம் வாய்ந்த மருத்துவர் அழுகிய தசையைப் பார்த்து அறுத்தால் தமிழ்க்குலம் தலையெடுக்கும் என்பதில் என்ன தடை? உள்ளொன்றும் வைத்துப் புறமொன்று பேசும் கள்வரது நச்சுப் பகைமையை நசுக்காவிட்டால் நாடு நலம் பெறுவதெப்படி?

தமிழர் வாழவேண்டும், தமிழர் பண்பாடு சிறக்க வேண்டும் என்ற அரும் பெருங் குறிகோளுடையவர் அறிஞர் 'அண்ணா' அவர்கள்.

ரா. பி. சேதுப்பிள்ளை

# அண்ணாவின் விருந்து

இளைஞர்களிடையில் அண்ணாதுரைக்கு செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாதுரையின் சொல்வன்மையும் எழுத்து வன்மையும், இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே இதற்குக் காரணம்.

உலக அறிவோடும், அரசியல் உணர்ச்சியோடும், இனவெழுச்சியும், கலை ஆர்வமும், மொழிப்பற்றும், தமிழகத்தில் குறிப்பிடத்தக்க வண்ணம் கிளர்ந்தெழுந்தன. இந்தப் புதிய எழுச்சியும், உணர்ச்சியும் வாலிபர்களையும் தீண்டாமலில்லை. அண்ணாதுரையின் பேச்சிலும் எழுத்திலும் புத்துணர்ச்சிக்கு ஒருவித கவர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது. அண்ணாதுரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்கள் சூழ்ந்தனர்.

அண்ணாதுரை, "சமூக சீர்திருத்தத்திற்குப் புதிய மெருகு கொடுத்து, புதிய உணர்ச்சிகளைத் தழுவிப் போகாவிட்டால் கட்சிக்கு வளர்ச்சியில்லை" எனக் கண்டார். அதனால் புதிய அமைப்புக்கு வேண்டிய பூர்வாங்க வேலைகளைப் பூர்த்தி செய்தார்.

ப. ஜீவானந்தம்

## சேபியில் ஆறணு !

ஒட்டலுக்குச் செல்லுகிறவன், சேபியிலே எவ்வளவு காசு இருக்கிறதோ அதைப் பொறுத்து அவனுக்கு ஒட்டலுக்குள்ளே போகிறபோது கம்பீரம் வரும் பையில் ஐந்து ரூபாய் நோட்டுடன் ஒருவன் உள்ளே போனல், கண்ணுக்குத் தெரிந்த பண்டத்தையெல்லாம் விலை கேட்காமல் அது ஒரு பிளேட் கொடு, இது ஒரு பிளேட் கொடு, என்பான். ஆறணு மட்டும் சேபியிலே வைத்துக் கொண்டிருப்பவன் போனல் பிளேட்டைக் கை காட்டிக் கேட்பதற்கு முன்னல், சர்வரை இரகசியமாகக் கூப்பிட்டு—பிறருடைய காதிலே விழுந்தால் வெட்கமென்று எண்ணி!—அது என்ன விலை, என்று கேட்டு பிறகு கொண்டுவரச் சொல்லுவான். இப்பொழுது எங்களுடைய நிலை இரண்டாவது நிலை. எங்கள் சேபியிலே ஐந்து ரூபாய் நோட்டு இல்லை; ஆறணு சம்பாதித்துக் கொண்டு ஒட்டலுக்குள்ளே போக வேண்டிய நிலையிலிருக்கிறோம்.

ஆகையினலே கிடைக்கின்ற ஒவ்வொரு பலகாரத்தையும் விலை கேட்டு வாங்குகிறோம்.

## இறைவன் இந்திராணி போல!

இங்கு புராணிகன் கூறுகிறுன் இந்திரன் மாறுவான் அடிக்கடி, அதாவது புண்ய பலனுக யார் வேண்டு மாஞலும் இந்திரன் ஆகலாம். அவ்விதம் பல இந்திரன்கள் ஏற்பட்டனர்—ஆனுல், இந்திரன் பலர் மாறி மாறித் தோன்றினுலும், இந்திராணி மட்டும் ஒரே அம்மைதான்—அதாவது, கலெக்டர் மாறுவார். இப்போது புன்னேவன நாதர் இருக்கிருர், சென்ற மாதம் புவனகிரி முதலியார் இருந்தார், அதற்கு முன்பு அப்துல் லத்தீப் இருந்தார். இப்படி கலெக்டர்கள் பலர் மாறி மாறி வந்தனர், என்ற போதிலும், கலெக்டர் ஆபீஸ் நாற்காலி, முன்பு இருந்ததுதான் இப்போதும். கலெக்டர் லத்தீப் உட்கார்ந்து வேலே பார்த்த அதே நாற்காலியில்தான் புன்னேவன நாதர் இப்போது உட்கார்ந்திருக்கிருர் என்பதுபோல—இந்திரன் ஆக யார் வந்தாலும், அவனுக்கு மனேவியாக இருக்கும் திருப்பணிபுரிய ஒரே ஒரு இந்திராணிதான்!

இதே போலப் பாபிலோனியாவில், ஆண் கடவுள்கள் ஆண்டுதோறும் கூட இறந்துபடுவதுண்டு —ஆனுல் பெண் தெய்வங்கள், இறவாவரம் பெற்றவை! என்று புராணம் கூறுகிறது.

## தோற்றமும் மாற்றமும்

சிலர் என்னே வெறுக்கலாம்; ஆனுல் உலக நியதியை உணர்ந்துள்ள காரணத்தால் நான் அவர்களே வெறுக்கவில்லே—மாருக, அவர்களே நேசிக்கவே செய்கிறேன்!

வானவில்லேப் பார்க்கிருேம்; அதன் வண்ண அழகைக் கண்டு மயங்குகிருேம்—வியந்து நிற்கிருேம்.

அதே நேரத்தில், விரக்தியடைந்து வழியில் செல்பவன், 'என்ன பார்க்கிருய்?' என்று கேட்டால், அந்த வான வில்லைப்பார்—எவ்வளவு அழகாய் இருக்கிறது, என்று கூறினல், விரக்தியடைந்துள்ள — ஏமாற்றமடைந்துள்ள அவன், மகாப் பெரிய வானவில்—என்ன அழகு அதில் இருக்கிறது, என்றுதான் கூறுவான். விரக்தியடைந்தவர்கள்—ஏமாற்றமடைந்தவர்கள், அழகையும் கலையையும் வெறுப்பது நியாயம்தான்; அதை உணர்ந்து நாம் நற்பணியாற்றுவதிலேயே கவனத்தைச் செலுத்த வேண்டும்.

## கிழவனை மணந்த இளம்பெண்

வயதான ஒரு கணவனுக்கு இளம் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுத்தால், அந்த இளம்பெண் கணவனின் முகத்தை உற்று பார்த்துக் கொண்டிருப்பாள்? தரையிலேயே பார்த்துக் கொண்டிருப்பதைப் போல், பாவிகள் நம்மை இப்படியெல்லாம் அலட்டி வைக்கிருர்களே என்று எண்ணிக் குனிந்து கொண்டார்கள். நாங்கள் எல்லாம் நிமிர்ந்து பார்த்துக் கொண்டோம். தமிழன் தன்னுடைய நாட்டுக்கு "தமிழ் நாடு" என்று தானே பெயர் வைப்பான் என்று காட்டுவதற்கு எழுந்து நின்ருேம். தமிழ் நாட்டுக்கு "தமிழ் நாடு" என்று பெயர் வைப்பதுகூட வேண்டாமென்று சொல்லுகிற தமிழர்கள் இவ்வளவுபேர் இருக்கிருேமே என்ற வெட்கத்திலே அவர்கள் எழுந்து நின்ருர்கள்.

## உழைப்போனும் உறங்குவோனும்

பொதுவுடமை பேசும் புனிதர்களே! பஞ்சம் பஞ்சமென்று பறை சாற்றுகிறீர்களே! அந்தப் பஞ்சம் யாவர்க்கும் பொதுவா? ஏன் ஒரு குலத்தைப் பஞ்சம்

பிடிப்பதில்லை? உங்களுக்கு நல்லெண்ண மிருந்தால் உங்கள் நெஞ்சில் தோன்றாமலிருக்குமா இது? பஞ்சத்தினால் சம்மட்டி ஏந்தும் பார்ப்பானைப் பார்ப்பதில்லை, ஏன்? கல் உடைக்கும் பார்ப்பானைத்தான் கண்டதுண்டா நீங்கள்? ஏன் அந்தக் குலம் மட்டும் குனியாது வளையாது குந்திக் குதிர்போல் பெருகுகிறது? ஏன் அவர்கள் கட்டை வண்டி ஓட்டுவதில்லை; கன மூட்டை சுமப்பதில்லை, மலத்தைக் கூட்டுவதில்லை?...ஏன் நம்மவர் உச்சி வேளையிலே உழைக்கின்றனர் மாடுபோல். நம்முடைய மகளிர் அனிச்சப் பூவினும் மென்மையர் என்று புலவரால் புகழப்படும் பூவையர்கள் மட்டும் காடேறி மேடேறி, நாடுசுற்றிச் சுள்ளி பொறுக்குகின்றனர் கவிகள் பாடும் கருங்குவளை மலர்போன்ற கண்படைத்த நம் இனக் காரிகைகள் கடுவெயில் நேரத்தில் கல் உடைக்கக் காணலாம். ஆனால் பார்ப்பனக் கும்பலில் ஒருவர் ஏன் செய்யவில்லை எந்த வேலையும்?

## காலச் சக்கரம்

வண்ணக் கலயங்களில் உள்ள சிவப்பும் பச்சையும் நீலமும் மஞ்சளும் கருப்பும் பிறவுமான வண்ணங்கள் தூரிகை கொண்டு ஓவியம் வரைவோரின் திறமையினால் வானமாகி, வாவியாகி, மலராகி, மாதாகி, கனியாகி, கிள்ளையாகி, அருவியாகி, அல்லியாகி விடுகிறது. கலயத்தில் இருந்தபோது, வெறும் வண்ணக் குழம்பு! ஓவியமான பிறகோ புத்தம் புதிய வடிவங்கள். வண்ணக் குழம்பின்றி ஓவியம் இல்லை. உண்மை. எனினும் ஓவியமான பிறகு, வண்ணக் குழம்பு என்றால் தான் இவை யாவும் என்று உரிமை கொண்டாடவா முடியும்! நம் உழைப்பு அந்த வண்ணக் குழம்புக்கு

ஒப்பிடலாம். ஓவியன் நிலையில் உள்ளது. காலச் சக்கரம்.

### மண்ணுள் மறைந்த வேர் !

மரம் இருக்கிறதே அதன் அடிப்பகுதிதான் மரத்தைத் தாங்கிப் பிடிக்கிறது. ஆனால் அடிமரத்தில் பூ இருக்காது, பழம் இருக்காது. நுனிமரம் பூத்துக் குலுங்குகிறதே என்று அடிமரம் வருத்தப்படுவதில்லை. அடிமரமாவது கண்ணுக்குத் தெரிகிறது; ஆனால், அந்த அடிமரத்தையும் தாங்கிப் பிடிக்கும் வேர்கள் கண்ணுக்குத் தெரியாமல் மண்ணுக்குள் மறைந்து கிடக்கின்றன.

### நன்னீரும் கழுநீரும்

தண்ணீரோடு பன்னீரைக் கலக்கலாம்; கெடுதி இல்லை; தண்ணீரும் பன்னீரின் மணத்தில் பங்கு பெறும் இதில் முரண்பாடு இல்லை; வேறுபாடுதான் உளது. இன்னும் இந்த வேறுபாடு தண்ணீருக்கும் இளநீருக்கும் உள்ள வேறுபாட்டைப் போன்றது. இளநீர் சற்று இனிப்பாக இருக்கும்; தண்ணீர் சுவையற்றிருக்கும். வேற்றுமை அவ்வளவே—இளநீரோடு தண்ணீர் கலந்தால் உபயோகமற்றதாகி விடாது. இதுவும் முரண்பாடல்ல, வேற்றுமைதான். இத்தகைய வேற்றுமைகளை விவேகமிருந்தால் விலக்கிக் கொள்ளலாம்; அறிவு இருந்தால் அகற்ற முடியும்; ஆனால் ஆரியத்திற்கும் திராவிடத்திற்கும் உள்ள முரண்பாடு தண்ணீருக்கும் கழுநீருக்கும் உள்ளதைப் போன்றது. தண்ணீர் கழுநீரோடு கலந்தால், கழுநீராகி முடை நாற்றமெடுக்கும். மற்றும் தண்ணீருக்கும் பிணலுக்கும் உள்ள முரண்பாட்டை ஒத்தவை திராவிடமும்

ஆரியமும். இரண்டும் பார்த்த அளவிலேயே முரண்பாடு உடையவை என்பது தெள்ளிதில் விளங்கும். தண்ணீர் பினைலுடன் கலந்தால் மணம் மாறும், கெட்டவாடை வீசும். இரண்டும் கலந்தால் தண்ணீரின் குணமே மாறும். கழுநீருடன் தண்ணீரைக் கலந்து உண்ண விரும்புவோர் எவர் உளர்?

## ஆறறிவோனே ஆய்ந்துபார்

சர்க்கஸ் பார்க்கிறோம், அதில் ஒரு மனிதன் சிங்கம் புலி முதலிய மூர்க்கப் பிராணிகளையும் அடக்கி ஆட்டுவிக்கிறான் ஒரு சிறு கோலைக் கையிலேந்தி... ஐந்தறிவு படைத்த மிருகத்தை ஆறறிவு படைத்த மனிதன் ஆட்டுவிப்பதில் அற்புதமில்லை; அசம்பாவிதமுமில்லை. அவன் தன் ஆறுவதறிவால் ஆட்டுகிறான் ஐந்தறிவை. அன்றாடவாழ்வில் நடப்பதென்ன? ஆறறிவு படைத்த மனிதன் அதே தன்மையுள்ள பிறிதொரு மனிதனுக்கு அடங்கி நடப்பது. ஆம்; திராவிடன் ஆரியனைக் கண்டதும் அடிபணிகிறான், ஏன்?

## அறந்தரும் இன்பம்

அறநெறி என்று கூறப்படுவது மந்திர உச்சாடனச் சொல் அல்ல. ஓமகுண்டத்தருகே உலவுவதல்ல! கள்ளமில்லா உள்ளத்தில் பூத்துக் காய்த்துப் பழுத்திடும் பயனும் சுவையும் உள்ள கனி. அது, வெறும் பொருள் பகிர்ந்து கொள்ளும் முறை மட்டுமல்ல—தொழில் அமைப்புத் திட்டம் மட்டுமல்ல—இவைகளுடன் கூட மக்கள், எவ்வகையிலே இழிவாலும் கொடுமையாலும், தாக்கப்பட்டாலும் அவர்களை மீட்டிடவும், அத்தகைய தாக்குதல் மக்களுக்கு நேரிடாதபடி முறை வகுத்தலும் ஆகிய எல்லாம் சேர்ந்த, போது

மான, பொறுப்பான, வாழ்க்கை அமைப்புத் திட்டம் அறநெறி. எனவேதான், மனித குலம், குரங்கு நிலையிலிருந்து கோயில் கட்டிக் கும்பிடும் நிலை அளவுக்கு வளர்ந்தும், எந்த இன்பம் இன்னமும் கிடைக்கவில்லையோ, அந்த இன்பத்தைப் பெறுவதற்கு வள்ளுவர் அறநெறியைக் காட்டியிருக்கிறார், அறுதியிட்டுக் கூறியிருக்கிறார். அறத்தால் வருவதே இன்பம்.

## புலித்தோல் பேசினால் ?

வேட்டையாடிக் கொல்லப்பட்ட புலியினுடைய தோலை மாட்டி வைத்திருக்கின்ற மாளிகைக்குள்ளே ஒரு புலி நுழையுமானால், அந்தப் புலிக்கு மனிதனுக்கு இருப்பதுபோல அறிந்து கொள்கிற சக்தியிருக்குமானால், மேலே மாட்டியிருக்கின்ற புலித்தோலைப் பார்த்து என்ன பரிதாபப்படுமோ அதைப்போல் நாம் மாட்டிவைக்கப்பட்ட புலித்தோலைப் போலிருக்கின்றோம்—தமிழனுடைய வரலாறு உருப்பெற்று வருவது போலத்தானே நீயுமிருந்தாய், என்னுடைய கரத்திலே இருந்த கூர்மையான நகங்களைப் போலத்தானே உன்னிடத்திலுமிருந்தது. என்னிடத்திலேயிருந்த போராடும் சக்தியும் தானே உன்னிடத்திலேயிருந்தது. 'ஏனிந்தத் தோலாகி விட்டாய்?' என்று கேட்டால் "நான் புதரிலே பதுங்கியிருந்த நேரத்தில் காதகன் என்னைக் கொன்று விட்டான்" என்று தோலுக்குச் சக்தி வந்து பேசினால் எப்படியிருக்குமோ, அந்த நிலைமை இன்றைய தினம் தமிழ்நாட்டிலே இருக்கின்றது. நமக்குப் பக்கத்திலே யிருக்கின்ற தூர்ந்து கிடக்கின்ற துறைமுகங்களையெல்லாம் பாருங்கள்—இங்கிருந்தெல்லாம் பாய்மரக் கப்பல்களில் நம்முடைய

காடுகளிலே கிடைக்கக்கூடிய அகிலையும் சந்தனத்தையும் நம்முடைய சாலையிலும் சோலையிலும் புள்ளிக் கலாபத்தை விரித்து ஆடிக்கொண்டிருந்த மயிலையும் இவைகளையெல்லாம் ஏற்றிக்கொண்டு ரோம் நாட்டுக்குச் சென்றார்கள் என்று வரலாறு இருப்பது பொய் யென்று கருதுகிறீர்கள்?

## காதலுக்கு வேலியா ?

செடியில் மலர் சிங்காரமாக இருக்கிறது. அதனைப் பறித்துக் கசக்கினால் கெடும். வண்டு ஆனந்தமாக ரீங்காரம் செய்கிறது! அதனைப் பிடித்துப் பேழையிலிட்டால் கீதம் கிளம்பாது. கிளி, கூண்டிலிருக்கும் போது, கொஞ்சுவதாகக் கூறுதல், நமது மயக்கமே தவிர வேறில்லை. கிள்ளை கொஞ்சவேண்டுமானால், கோவைக் கனியுள்ள தோப்பிலே போய்க் காண வேண்டும். மழலைச் சொல் இன்பத்தை மற்றதில் காண முடியாது. அது போன்றே, இயற்கையாக எழும் காதல், தடைப் படுத்தப்படாமல், அதற்குச் சுவர் போடப்படாமல், அது தாண்டவமாடும்போது கண்டால் அதன் பெருமையைக் காண முடியுமே தவிர வேறு விதத்தில் காண முடியாது.

## விதைக்காது விளையும் கழனி

காய்ச்சி வைத்த பாலைப் பருகினர், அதிலே கற்கண்டு பொடி குறைவு என்று குறைகூறிக் கொண்டு! அரைத்து வைத்திருந்த சந்தனத்தை உடலெங்கும் அப்பிக் கொண்டனர், அரைத்த முறை அவ்வளவு சரியில்லை என்று கூறிக்கொண்டு. கோலம் துறவுதான்; ஆனால் குறைவற்ற இன்பத்தைக் கேட்டும் பெற்றனர். ஏசு, ராச்சியம் வேண்டேன். ஏனெனில் என் இலட்சியம்

மனித சமாஜத்திலே தர்ம ராஜ்யம் ஏற்படுத்த வேண்டு மென்பதே என்றார். இந்தக் குருதேவர்களும் ராஜ்யம் வேண்டாமென்றனர். ராஜ்யம் கூடாது என்பதற்காக அல்ல. ராஜ்யாதிகாரிகள் நமக்குச் சேவை செய்யும் போது நாமே ராஜ்யம் அமைத்துச் சிரமப்படுவானேன் என்பதற்காக. பொது நலம் என் இலட்சியம். ஆகவே சுயநல நோக்கமாகிய இராஜபோகம் வேண்டேன் என்றார் ஏசு! இங்கே குருமார்கள் ராஜ்யம் வேண்டாமென்று சொன்னது சுயநலம் கூடாது என்ற பெருநோக்கத்துடன் அல்ல. 'ராஜ்யத்தை ஆள்வதால் கிடைக்கக்கூடிய சுகத்தை அந்த ராஜ்யத்தை ஆள் வதற்காக எடுத்துக் கொள்ள வேண்டிய சிரமமின்றி அடைய வேண்டும்' என்பதற்காக. விதைக்காது விளையும் கழனி இருக்க, விதைத்தால் மட்டுமே விளையக் கூடிய கழனியை யார் விரும்புவர்? இத்தகைய குருமார் கூட்டமே பண்டைய நாட்களிலே கொற்றவர்களை எல்லாம் இங்கே ஆட்டிப் படைத்திருக்கிறது.

## பத்துக்குப் பத்து நூறு

ரயில்வே கம்பார்ட்மெண்ட்டில் ஏறுகிறபோது தவறி இன்னொருவர் கால் நம்மீது பட்டுவிட்டால் முறைக்கிறோம். "பார்த்துப் போகக் கூடாதா?" என்கிறோம். "இல்லேண்ணே, கவனிக்கல்லே" என் பான் அவன். "கவனிக்காமல் இங்கே ஏன் வந்தாய்?" என்போம். உடனே சண்டை நடக்கும்! உணர்ச்சி அங்கே இருக்கிறது. அற்ப விசயங்களுக்கு எல்லாம் நமக்கு உணர்ச்சியிருக்கிறது. ஆனால் மக்களுடைய ஆத்மா என்று சொல்லப்படுகிற மொழி அழிக்கப்படுகிற நேரத்தில் உணர்ச்சி வருவதில்லையே ஏன்?

## அசுவமும் அரசியலும்

... குதிரையைப் பற்றிப் பேசும்படி சிலருக்கு அழைப்பு விட்டுப் பார்ப்போம்—வேடிக்கையாக இருக்கும் அவர்களின் பேச்சு.

வரலாற்று வகுப்பு மாணவர் பேசுவதானுல், "குதிரைகளுக்குக் கெம்பீரமும் பெருமையும் ஏன் ஏற்படாது! மகாவீரன் அலெக்சாண்டர் ஏறிவந்தது ப்யூசிபாலஸ் எனும் குதிரைமீது அல்லவா" என்று சுவையுறச் சொல்வார். தமிழக ஏடுபடித்தோர், தேசிங்கு ராஜா கதையில் வரும் பாராசாரி, நீலவேணி பற்றிப் பேசாமலிரார். பழம்பாடல் படித்தோர் முன் இருவர் தொட்டிழுக்க பின்னிருந்து சிலர் தள்ள, மாதம் காதவழி பறந்த குதிரையைக் காளமேகம் கண்ட காட்சி பற்றிக் கூறுவர். கிண்டி குதிரைப் பந்தயத்தின் கேடுகளை விளக்கும் நோக்கமுடையோரோ—'தாலி அறுக்கும் பிசாசே, தந்தைக்கும் தனயனுக்கும் பகை மூட்டும் சனியனே, சூழ்ச்சியிலே மக்களைச் சிக்க வைக்கும் சகுனியே, நேசர்களுக்கிடையே மனக் கிலேசத்தைக் கிளப்பிவிடும் மாபாவியே, உன்னுல் கெட்டன குடும்பங்கள்—கொழுத்தனர் வட்டிக் கடைக் காரர். குடித்தனத்திலே தீ மூட்டிஞய்—கொலைக்கும் களவுக்குங்கூட காரணமாஞய் குதிரையே, கோரத்தின் சொருபமே, பாவத்தின் கருவியே, பாதகத்தின் பங்காளியே, உன் குலம் அழிக. கூண்டோடு அழிக. பூண்டின்றி ஒழிக' என்று கோபமாகக் கூறுவார். ஒரு சமயம் பிரகதேவனை இலட்சுமி தேவியார் கோட்டாஞகப் பிறக்கும்படிச் சாபமிட்டார். பிரமன் கோட்டாஞகப் பிறந்தான், அந்தக் கோட்டான்

முட்டையிலே குதிரை பிறந்தது, என்றுள்ள புராணத்தைக் கூறுவார் புராணிகர். சைவப் பிரசங்கியாரோ குதிரைகளா—அடியேனுக்கு அடங்காப் கோபம் பிறக்கும். அவைகளைக் கண்டதும் என் மணிவாசகன் இந்தப் பாழான குதிரைகளாலன்றோ சிறைப்பட்டான், துயருற்றான் என்று துவங்கி இறுதியில் ஆனால் தீர யோசிக்கும்போது பரியிடம் பரிவே பிறக்கிறது. ஏனெனில் மணிவாசகரின் பெருமை மாநிலம் அறியும் நிலை, குதிரையாலன்றோ ஏற்பட்டது! எனவே குதிரைக் குலம் வாழ்க என்று கூறி முடிக்கக் கூடும்.

## குளித்தெடுத்த முத்து

வாழ்க்கையில் நாம் சிறந்த பொருள்களை, வாழ்க்கைக்கு வளமான பொருள்களைச் சிறிதும் வாட்டமின்றிப் பெற முடியாது; அதற்கு ஓயாத உழைப்பும் சலியாத முயற்சியும் வேண்டும். சான்றாக, முத்துக்களைப் பெற வேண்டுமானால் கடலின் கொந்தளிப்பையும், சுறா மீன்களின் தொல்லையையும் அகற்றி ஆண்மையோடு முத்துக் குளிக்க வேண்டும். கண்ணைப் பறிக்கும் பற்பலவித ஆபரணங்கள் செய்யத் தங்கம் வேண்டுமானால் பாறையின் வெடிப்பிற்கும் மணலின் சரிவிற்கும் துணிந்தபல்லாயிரவர் பொற்சுரங்கங்களிலே அல்லும் பகலும் அனவரதமும் பாடுபட வேண்டியிருக்கிறது. அது போலவேதான் ஏடுகளிலும், இலக்கியங்களில் சிறந்தவற்றை நாட்டுக்கு நலம் பயக்கும் ஏடுகளை, மனிதனை மனிதத்தன்மை உள்ளவனாக விளங்கத் தூண்டும் இலக்கியங்களை, அறிவை அகலப் பரப்பும் அந்தாதிகளை அனைவருக்கும் பயன்படக் கூடிய நிலையில் வெளிப்படுத்த வேண்டும்.

## கோபுரத்திலிருந்து குப்பைமேடு

இலக்கிய ஏடுகள் மக்களின் மார்க்கெட்டிலே மலிந்து நடமாட வேண்டுமானால், இலக்கியம் கோபுர உச்சியிலிருந்து குப்பைமேட்டுக்கு வர்த்தயாராக இருக்க வேண்டும். கற்றோரும் மற்றோரும், பண்டிதரும், பாமரரும், பணக்காரனும், ஏழையும் படித்துணரும் பாங்கிலே, எளிய நடையிலே இயற்கைக் கருத்தைக் கவின் பெற எடுத்துரைக்கும் ஏடுகள் எழுதப்பட வேண்டும். ஆனால் நம் நாட்டு இலக்கிய கர்த்தாக்கள் செய்துள்ள சேவை இதற்கு நேர்மாறானது. பண்டிதரும் பகுத்தறிய முடியாத பண்புடனே நம் நாட்டுப் பண்டிதர்கள் நூல் எழுதியிருக்கின்றனர்; சிற்றறிவினர் சிந்திக்கவும் கூடாத சிறப்புற்று விளங்குகின்றன இந்நாட்டு ஏடுகள்.

## தூற்றுவோரும் போற்றுவோரும்

ஒரு மருத்துவன், பிழைப்பு நாடி வேற்றூர் சென்றானாம்—ஒரு நாள் காலை. அந்த ஊர் மக்களிலே பலர், காலை வெயிலில் உலவிக்கொண்டும், வேலை செய்து கொண்டும் இருக்கக் கண்டான். மெத்த மகிழ்ச்சி ஏற்பட்டதாம் மருத்துவனுக்கு; காலை வெயில் பித்தம் உண்டாக்கும். இந்த ஊர்மக்கள், காலை வெயிலில் கிடக்கிறார்கள்; நிச்சயமாக, பித்தம் சம்பந்தப் பட்ட நோய் உண்டாகும், நமக்கு நிறைய வருமானம் கிடைக்கும்; ஏற்ற இடம் என்று எண்ணி மகிழ்ச்சி அடைந்து தன் ஊர் சென்று, மருந்துப் பெட்டிகளுடன், மாலை வந்தானாம். வந்ததும் மகிழ்ச்சியே போய்விட்டதாம்; கவலை பிடித்தாட்டிற்றாம் காரணம் என்ன என்றால், ஊர்மக்கள், மாலையில் மஞ்சள் வெயிலில் காய்ந்து கொண்டிருந்ததைக் கண்டான்;

மாலை வேளையில் மஞ்சள் வெயில் உடலில் பட்டால் பித்தம் போய்விடும் என்பது மருத்துவ உண்மை! மருத்துவன் என்ன செய்வான்! இந்த ஊர் பயனில்லை என்று எண்ணி, வேறு இடம் நாடுறும்.

## சரியா ? முறையா ?

பயனும் பெருமையும் இருப்பதாகவும் ஒரு இடத்தைக் குறிப்பிட்டு, அதே இடத்துக்கு ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினரை மட்டும் நுழையக் கூடாது என்று சொன்னால், எவ்வளவு வேதனை இருக்கும், கூறும் நமக்கு எவ்வளவு கடினமான மனது இருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள். இன்றிரவு, உங்கள் கையை மூடிக்கொண்டு உங்கள் வீட்டுக்குக் கொஞ்சு மொழிக் குழந்தையைக் கூப்பிட்டுத் தம்பி கைக்குள்ளே ஒரு அருமையான வஸ்து இருக்கிறது—பளபளப்பானது—யாருக்கும் கிடைக்காதது என்று கூறிவிட்டுக் குதித்துக் கொண்டே அந்தக் குழந்தை "அண்ணே, அதை எனக்குக் கொடேன்" என்று கெஞ்சிக் கேட்கும் போது "ஊஹூம்...தர முடியாது—உனக்கல்ல, அது தரமாட்டேன்" என்று கூறிப் பாருங்கள், நீங்கள் படுகிறபாடு தெரியும். நானும்தான்—எத்தனை கிள்ளுகளோ, எவ்வளவு மல்லுகளோ—அழக்கூடச் செய்யும் குழந்தை—அம்மா ஓடிவந்து அவசரமாகக் குழந்தையை அணைத்துக் கொண்டு 'பொல்லாத விளையாட்டு' என்று கூறி நமது கரத்தைப் பிடித்து இழுத்துக் குழந்தையை ஏமாற்றுகிறீர்கள் என்று கோபிப்பார்கள்.

குடும்பத்தைப் பொறுத்தமட்டிலே, இதிலே ஒரு வகைக் குதூகலம்கூட இருக்கும். குழந்தையின் உள்ளத்திலே எவ்வளவு வேதனை ஏற்பட்டிருக்கும் தெரியுமா!

குழந்தையின் மனமே இப்படி நாம் செய்துவரும் கொடுமை, எட்டுக்கோடி மக்களுக்கு இறைவனின் இல்லத்தின் அருமைகளைக் கூறிக்கொண்டே, அந்த இடத்தில் மட்டும் நீ வரக்கூடாது என்கிறோம். சரியா என்று யோசித்துப் பாருங்கள்.

## சுதந்திரப் பிறையும் தேய்ந்த திரையும்

சுதந்திரமடைந்த நாடு, நெடுங்காலத்துக்கு முன்பு, ஏதேதோ வர்ணங்கள் கொண்டு தீட்டப்பட்டு, காலத்தால் மங்கி, உருவம் அழிந்து, வர்ணங்கள் குழைத்தும் கலந்தும்போய், அவ்வப்போது திருத்தப்பட்டவைகளும் தேய்ந்துபோன, திரைபோலிருக்கும், துவக்கத்தில் நாலாந்தர ஐந்தாந்தர நாடகக் கம்பெனிகளிலே காணலாம் அதுபோன்ற திரைகளை.

நெடுங்காலம் அடிமைப் பிடியிலிருந்து விடுபட்டு, சுதந்திரம் அடைந்த எந்த நாடும் அந்தத் திரைபோலத்தான் இருக்கும்.

## தீரம் வேறு—தந்திரம் வேறு

தன் மனைவியை, இராவணன் எடுத்துச் சென்றான் என்று கேள்விப்பட்டதும் இராமன் வீரமாகச் செய்திருக்க வேண்டியது என்ன? எங்கே அந்த இராவணன் என்று முழக்கமிட்டு, இலங்கை சென்றிருக்க வேண்டும். அதுவே வீரம்...ஹிட்லருக்கு ருமேனியப்படை கிடைத்ததுபோல வானரப்படையைப் பெற்று, அண்ணன் தம்பி சண்டையில் புகுந்து வானர சேனையைப் பெற்று, அதை இலங்காதிபதியின் மீது ஏவினான். இது இராஜதந்திரம் என்று கூறுங்கள்... ஆனால், இதனை வீரம் என்று கூறாதீர்கள், எவரும் ஒப்பார்.

## வீட்டுக்குச் சுவர்—நாட்டுக்கு எல்லை

வீட்டுக்கு வீடு சுவர், ஆற்றுக்கு அணை, அமைந்திருப்பது பாகப் பிரிவினையால் அல்லவா, வீட்டுக்கு வீடு சுவர் தேவைப்படுகிறது. அண்டை வீட்டுக்காரனுக்கு மத்தியிலே கதவிருந்தாலும், இரவிலே நெடுநேரமானதும் அண்டை வீட்டுக்காரன் நாம் படுக்கைக்குப் போகும் பொழுது ஏதாவது பேசினால் எல்லாம் நாளைக் காலைப் பேசிக் கொள்ளலாமப்பா என்று சொல்லிக் கொண்டே கதவைத் தாளிட்டும் விடுவதை நீங்கள் காணவில்லையா? வீட்டுக்கு வீடு சுவர் அவசியம் தேவைப் படுகிறபோது, நாட்டுக்கு நாடு எல்லையிருந்தால் அதில் தப்பென்ன?

## அக்கினி, வருண, வாயு அஸ்திரங்கள்

தற்காலத்திலுள்ள குண்டு, தீக்குண்டு முதலியனவெல்லாம் பழையகால வாயுவாஸ்திர அக்கினியாஸ்திரங்கள்தாம் என்று வீண் பெருமை பேசுகின்றனர் பழமை விரும்பிகள். அத்தகைய அஸ்திரங்கள் அந்தக் காலத்தில் இருந்தனவோ? இல்லையோ? அது நமக்குத் தெரியாது. ஆனால் இக்காலத்தில் இல்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஆனால் நாம் நமது அன்றாட வாழ்க்கையில் அவைகளைக் காணலாம். எங்கு? ஏழை பாட்டாளி மக்களின் வீட்டில். ஏழை பாட்டாளி நாளெல்லாம் உழைத்து நலிந்து மாலையில ஆயாசம்தீர, சுராபானத்தை (கள்ளை)ப் பருகி ஆனந்தமாக உள்ளே நுழைந்து தன் மனைவியை வம்புக்கிழுத்து அவள் கன்னத்தில் அறையும் அறைதான் அக்கினியாஸ்திரம. அதைப்பெற்று அவள் அழுவதால் வழியும் கண்ணீர் நமக்கு வருணாஸ்திரத்தின் வனப்பை நினைவிற்குக்

கொண்டு வருகின்றது. அதைக் கண்டு அக்குடியன் விடும் பெருமூச்சே வாயுவாஸ்திரமாகும். இத்தகைய அஸ்திரங்களைத்தான் அன்றாட வாழ்க்கையில் நாம் காண்கிறோம்; அக்னியாஸ்திரத்தைக் கண்டு தீக் குண்டு உண்டாக்கினர் என்று கூறுவது அறியாப் பாகரும் எள்ளி நகையாடத்தக்க ஏமாற்று வித்தை. புதியனவெல்லாம் நம் நாட்டுப் பழம் பெரும் பொக்கிஷங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டவை என்று பேசிப் பூரிப்பதிலே பெருமை ஏதாவது உண்டா?

## தன்மானச் செயலா?

சோலையிலே இருவர் உல்லாசமாக உலவுகின்றனர்...ஒருவர் ஆண்; மற்றொருவர் பெண்...அது சமயம் இருவர் அவ்வழியே வருகின்றனர்...இருவரில் ஒருவர் மற்றவரைப் பார்த்து "என்ன ஐயா..? அவனோடு சல்லாபமாக இருக்கிறாளே அவள் என்னுடைய மனைவியாக இருந்தவள்...! எனக்கும் அவளுக்கும் இருந்த பொருத்தம்தான் என்ன!" என்று எக்காளமிடுவதற்கு ஒப்பாகுமென்றும் கூறுகின்றேன். இது ஒழுங்கா? தன்மானமுடையோர் செயலாகுமா?

## சிந்தனைப் புரட்சி தேவை

பிரெஞ்சுப் புரட்சி பிரான்சு நாட்டில் கொண்டாடப்பட்டதையும் படிக்கிறார்கள். நம் நாட்டில் விநாயக சதுர்த்தி விழாக் கொண்டாடப்படுவதையும் படிக்கிறார்கள். யாராவது சிந்தித்தார்களா? ஏன் நம் நாட்டில் மாத்திரம் 'விழா' இவ்வளவு மோசமான நிலையில் இருக்கவேண்டும் என்று. ஏன் சிந்திக்கவில்லை? பாமரர்களிடம் படிப்பு இல்லை—படித்தவர்

களிடம் பண்பு இல்லை. இன்று சொல்லப்படுகின்ற பாட முறையே மாற்றி அமைக்கப்படவேண்டும். சிந்தனையைக் கிளறும்படியான எந்தத் திட்டமும் நம் கையில் இல்லை. ஜெர்மனி நாட்டில் ஹிட்லர் தம் ஆட்சியில் கல்வித்துறையில் புகுத்திய புதிய முறைதான் பிள்ளைப் பருவத்திலேயே ஜெர்மானிய நாட்டு இளைஞர்களுக்கு ஹிட்லர் பக்தியும் இராணுவத்தினிடம் மரியாதையும், நாசிசத்திடம் நம்பிக்கையும் கொள்ளச்செய்தது...நமது பிள்ளைகளிடம் "நான் நான்கு ம்மாம்பழங்கள் வைத்திருந்தேன். அதை இரண்டு பேருக்குக் கொடுத்தால் ஆளுக்கு எத்தனை மாம்பழம்?' என்று கணக்கு போடுவோம். பிள்ளைகளோ மாம்பழம் ஆளுக்கு எத்தனை என்று யோசிப்பதைவிட மாம்பழத்தின் ருசி எப்படியிருக்கும் என்று யோசிப்பதில் நினைப்பை அதிகமாகச் செலுத்துவார்கள். ஆனால் இப்படியல்ல ஜெர்மனியில் பிள்ளைகளுக்குக் கணக்குப் போடுவது. 4 டாங்கிகள் தான் நம்மிடம் இருக்கின்றன. எதிரியிடம் 8 டாங்கிகள் இருக்கின்றன. எப்படி இந்த 4 டாங்கிகளைக் கொண்டு எதிரியைத் தோற்கடிப்பது என்ற முறையில் கேள்வி இருக்கும். இன்னும் நிமிடத்திற்கு 60 மைல் வேகத்தில் செல்லும் விமானம், காலை 7 மணிக்கு இங்கிருந்து கிளம்பி இலண்டனில் குறித்த இடத்தில் குண்டு வீசிவிட்டு வரவேண்டுமானால் எத்தனை மணி பிடிக்கும் என்று கேள்வியிருக்கும்...இதைப் போல் இராணுவப் படிப்பை ஹிட்லர் கையாண்ட நாசிச முறையை நாம் கல்வியில் கடைப்பிடிக்கவேண்டும்.

## பழம் பெருமை பேசுதல்

—மாட மாளிகையிலே மனைவி மக்களோடு மாண்புற வாழ்ந்த மனிதன் ஒருவன், கால நிலைமையாலோ,

கருத்தழிவினாலோ, கர்வத்தாலோ, கயமைத்தனத்தாலோ, பிறரின் படுமோசத்தாலோ வறிஞனானான் என வைத்துக் கொள்வோம். அவனது மாடமாளிகை மாற்றானுக்கு உரிமையாய்விட்டது. சிலகாலம் சென்ற பின் அவ்வறியனான முன்னாள் செல்வன் தன் நண்பன் ஒருவனோடு அவ்வீதி வழியே செல்லப் புறப்படுங்கால் அவனது மானம் அவனை அவ்வீதி வழியில் காலெடுத்து வைக்க விடாது அவன் தன்மானமுடையவனாயிருந்தால். தவறி அவ்வழி புகநேரினும் அவ்வீட்டை ஏறெடுத்துப் பாரான் தன்மானமுள்ளோன். தன் நண்பன் அம்மனையின் மாண்பைக் குறித்துப் பேசினும் தலை கவிழ்வான் மனையைப் பார்க்க மனமில்லாததால். நண்பன் அதுபற்றித் தன்னோடு உரையாடப் புகினும் இரண்டொரு சொற்களால் தன்னிலையை உணர்த்தாது உணர்த்தி வேறு போக்கிலே உரையாடலைத் திருப்பி அவ்விடம் விட்டு விரைவிலே நகர்வான். அதுதான் மனிதனின் தன்மான உணர்ச்சி! அது ஒவ்வோர் உயிருக்கும் வேண்டும்; மிக இன்றியமையாதது கூட. ஆனால் தன்மானமற்ற தன்மையாளன் தூரத்தே வரும்பொழுதே, நண்பன் வேறுவழி செல்லப்புகினும் தடுத்து, "என் மனை மகா நேர்த்தியானது; இதோ இந்த வீதியில்தான் அது உள்ளது பார்த்துப் போகலாம் வா; ஆகா! அதன் அழகே அழகு; அதனை வைத்து அநுபவிக்கக் கொடுத்து வைக்க வேண்டும்; சுற்றிலும் பூங்காவென்ன; நடுநடுவேயுள்ள கண்ணாடிகளின் நேர்த்தி என்ன" என்று இன்னும் பலபலப் பேசுவான். முடிவிலே, "அது ஒரு காலத்தில் நம்மிடமிருந்த மனைதான்; அப்பொழுதிருந்த சீரும் சிறப்புமென்ன; என்னை இவன் ஏமாற்றி இம் மனையைப் பற்றிக் கொண்டான்; இருந்தாலும் நான்

அநுபவித்து ஆண்ட அரண்மனைதானே'' என்று உள்ளம் நெகிழ்வான்; உற்சாகம் காட்டுவான். இது போன்ற தன்மைதானே பழம்பெருமை பேசும் தற்கால வீரர்களின் செயல்!

## மாறும் மனம்

—மாலைநேரம் ஒரு வாலிபன் தன் நண்பர்கள் புடை சூழ, நன்ருகச் சாப்பிட்டுவிட்டுக் காபி கிளப்பிலிருந்து வெளியில் வருகிருன் என்று வைத்துக்கொள்வோம், வருகிற வாலிபனைப் பார்த்து ஒரு பிச்சைக்காரன் "சாமி, காலணு காசு சாமி!" என்று கேட்பான். உடனே வாலிபன் ஒரு அணுவை வீசி எறிவான். பீடாவைப் போட்டுக்கொண்டே இன்னும் கொஞ்சம் தூரம் சென்றவுடன் வாலிபனைப் பார்த்து இன்னொரு பிச்சைக்காரன் 'ஐயா', என்று கையை நீட்டுவான். இல்லை என்னுமல் காலணு காசு கொடுப்பான். இன்னும் கொஞ்ச தூரம் சென்றவுடன் அதே வாலிபனைப் பார்த்து மற்ருெரு பிச்சைக்கா்ரன் "ஐயா" என்ருல் "சீ போ! போடான்னு போ!" என்று கூறிவிட்டு தன் நண்பர்களைப் பார்த்து, "Nowadays I don't agree with the beggar Problem Sir" என்று சொல்லுவான். கொஞ்ச நேரத்தில் ஒரு வாலிபனுடைய உள்ளம் மாறக் காண்கிருேம் முதலில் காலணு கேட்ட பிச்சைக்காரனுக்கு ஒரு அணுவை வீசி எறிந்த அதே வாலிபன்தான் மூன்ருந் தடவையாக பிச்சைக் காரர்களைச் சந்தித்தபோது "சீ! போடா!" என்று ஏசுகிருன். காரணம் காபி கிளப்பைவிட்டு வெளிவந்த போது இருந்த ஆனந்தம் மாறி, கையில் காசு குறைய ஆரம்பித்தவுடன் வழக்கமாக அவனுடைய மனம் மாத்திரம் என்ன, எவனுடைய மனமும், அந்த நிலையில் அப்படி மாறித்தானே ஆகும்! சாதாரண ஒரு பணக்

கார வாலிபனுடைய நிலையே இப்படி என்றால் போக போக்கியத்தில் புரண்ட தமிழர்களுடைய நிலை எப்படி யிருக்கும்?

## வாய் வேதாந்தம்

நாட்டிலே ஆகாய விமானம் ஆகாயத்திலே பறக்கும். கிராமத்தான் அதுகண்டு அதிசயமுறுவான். ஆ! ஆ! இந்த வெள்ளைக்காரன் என்ன கெட்டிக்காரன் என்பான். அத்தருணம் அண்டையிலே இருக்கும் இராமநாத சாஸ்திரிகளோ அல்லது சோமசுந்தர குருக்களோ எவராவது உடனே உரைப்பார், "என்ன அப்பா பெரிய அதிசயத்தைக் கண்டுவிட்டாய்? நம் முடைய புராணத்திலே இல்லாத ஆகாய விமானமா? இராமாயணத்திலே புஷ்பக விமானத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதை நேற்றுக்கூடக் கேட்டாயே; அதற்குள்ளாகவா மறந்துவிட்டாய்! அந்தக் காலத்திலே இல்லாத விமானமா? இவை எல்லாம் நம் வேதங்களி லிருந்து காப்பியடித்தவைதான். இன்னும் ஒரு சிறிய விஷயம் பார். அதோ பறப்பது என்ன! கருடன். கருடன் என்ன நேராகப் பறக்கிறது? பார்ப்பதற்கு ஆகாயவிமானம் போல் இல்லையா? அந்தக் 'கருடன் மெக்கானிசம்தான் அந்த ஏரோப்பிளேனில் இருக் கின்றது. வேறென்ன' என்று வாய் வேதாந்தம் பேசு வார்.

## சக்தியிலே விளைச்சல்—பக்தியிலே அலைச்சல்!

கோடி கோடியாக லாபம் குவிந்தாலும் முதலாளி மார்கள் குமுறும் தொழிலாளியிடம் குளிர்ந்த முகத் துடன் நடக்க முன் வருவதில்லை. கோகிலவாணி களுக்குக் கொட்டித் தரவும், கோலாகலமான வாழ்க்கை

நடத்தவும், கோயில் கும்பாபிஷேக செலவு செய்யவும் மனம் வருகிறதே தவிர தொழிலாளிகளுக்கு போனஸ் தருவதற்குக்கூட மனம் சுலபத்தில் இடந்தருவதில்லை. ஏழையின் வயிற்றிலடித்து திரட்டிய பணத்தை உருட்டி வைத்துக்கொண்டிருக்கும் செல்வந்தர்கள் பணத்தை பகுத்தறிவுக்கோ பயன்தரும் பணிக்ோ செலவிடும் திருந்திய மனம் உடையவர்களல்ல. போக போக்கியத்துக்கும் போகிற கதி நல்லதாக இருக்க வேண்டுமே என்பதற்காக மட்டுமே பணத்தைச் செலவிடுவார்கள்.

## பச்சைப் பாம்பு!

ரோசா செடியில் ஒரு அழகிய மலரைப் பறிக்கச் செல்கிறோம். அம்மலரைப் பறிக்க முடியாமல் அதைச் சுற்றி ஒரு பச்சைப் பாம்பு சுற்றியிருக்கிறது. நமக்கு ரோசா மலர் வேண்டும். பழுதுபடாமல் அதே சமயம் பச்சைப் பாம்பும் கொல்லப்பட வேண்டும். அதனால் பச்சைப் பாம்பை ஓசைப் படாமல் ஒரு கழியினால் வெளியே எடுத்துக் கொன்று பிறகு அம்மலரைப் பறிக்க முயல்கிறோம்.

## சாவிப் பாசமா? பிள்ளைப் பாசமா?

ஒரு புலிக்கு இருக்கும் வலுவை அளவிட்டுக் கொண்டு, அதற்குத் தகுந்தபடி, ஆயுத பலத்தைத் தேடிக் கொள்ளலாம். ஆனால் பல புலிகளை ஏக காலத்திலே ஏவி விடக்கூடிய காட்டரசனின் வலிவு எந்த அளவு என்று எப்படிக் கணக்கிட முடியும்? அதிலும் சுகபோகத்தையும், சொந்த நலனையும் பாது காத்துக் கொள்வதிலே அக்கறை கொண்டு விட்டால், அந்த சுகபோகத்தின் சுவையிலே இலயித்துவிட்டால், அதனை இழக்கத் துளியும் மனம் வராத நிலையில், அந்த

சுகபோகத்தை அழித்து விடுவதற்கான சக்தியைப் பெற்றவரிடம், அடிமையாகத்தானே தீரவேண்டும்! இரும்புப் பெட்டியிலே உள்ள எண்பது இலட்சத்திலே ஆசை இருக்கும் வரையில் இடுப்பிலே தொங்கும் பெட்டிச் சாவியை பெற்ற மகனைவிட அதிகப் பிரியமாகவும் சாக்கிரதையாகவும் கவனித்துக் கொள்வது சகஜந்தானே!

## குழந்தைப் பருவக் கதைகள்

குழந்தையை மிரட்டக் கிழவர்கள், ஐந்து கண்ணனைப் பற்றியும், ஆறு காலனைப் பற்றியும் கதை கூறும்போது குழந்தைகள் மிரட்சியுடன் கேட்டு, வாய் பொத்திக் கொண்டிருக்குமேயன்றி, "தாத்தா, இதை நான் நம்ப முடியாது" என்று கூறுவதுண்டோ? குழந்தைப் பருவம், மனித சமுதாயத்துக்கு இருந்த போது தான் இடதேவன், மின்னல் மாதா, மழை மாகாளி, தீக்கடவுள் எனக் கடவுட் கதைகள் கட்டி விடப் பட்டன. உலகிலே இதுபோலத் தோன்றிய கதைகள், அறிவுப் பருவத்தை அவனியோர் பெற்றதும் மறையலாயின! ஆனால், இங்குமட்டும், ஆரியர் அந்த நாள் ஆபாசத்தை இன்னும் விடாப்பிடியாக வைத்துக் கொண்டிருப்பதுடன், அதே கருத்துக்களை மக்களிடையே பரப்புவதையே தங்கள் பிழைப்பாக வைத்துக் கொண்டுள்ளனர்.

## கம்பரின் காமக்கண்

...ஊரிலே காமாந்தகாரன் எவனையாவது கேலி செய்ய வேண்டுமானால் சொல்வார்களல்லவா, "அந்த ஆளா? அவன் கம்பத்துக்குச் சேலை கட்டி இருந்தால் கூட, கன்னியோ என்று எண்ணி அருகே போவான்'

என்று அவன் கெட்டான்; போங்கள்! நமது அரிகதா காவியக்காரராம் கம்பன் அவனைத் தோற்கடிக்கிறார். வீட்டின் முன்னால் கட்டப்பட்டிருந்த வாழை மாதரின் தொடையையும் கமுகு கன்னியரின் கழுத்தையும், முத்துமாலை மோகனச் சிரிப்புடன் காட்சி தரும் பாவை யரின் பல் வரிசையையும், கவிக்கு நினைவிற்குக் கொண்டு வந்து விடுகின்றன.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்—என்றும் பார்க்குமிடமெங்கும் ஓர் நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே—என்றும், தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்றும் கடவுளைப் பற்றித்தான் பலர் கூறக் கேட்டிருப்பீர்கள். கம்பருக்குப் பிரத்தியட்ச தெய்வம் பிரதிஷ்டா மூர்த்தி பெண். அந்த "சக்தி" மயமாகவே அவருடைய கண்களுக்குச் சகல பொருளும் தென்படுகின்றன. வாழையானாலென்ன! கமுகானா லென்ன! அவருக்கு அவை யாவும் அரிவையரின் அங்கங்கள் போலவே தெரிகின்றன. ஆமாம்! கவிதா கண்களா காமக் கண்களா அந்த நிலையிலுள்ள நயனங்கள் என்பதுதான் என் கேள்வி.

## தாது புஷ்டி லேகியம்!

"என்ன, வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது?"

"ஒளி மயமாக இருக்கிறது!"

"யாருக்கு?" என்பார் சத்தியமூர்த்தி!

கொஞ்சங்கூடத் தயங்காமல் "உங்களுக்குத்தான்" என்பார் ராமசாமி முதலியார். அந்த நிலைமை இப் போது வேகமாக மாறிவிட்டிருக்கிறது. மாற்றுக் கட்சி யினரைப் பார்க்கும்போது வர முடியாத கோபத்தை

வரவழைத்துக் கொண்டு பேசுவதுதான் கட்சிப்பற்று—கட்சியில் உறுதி என்று நினைக்கிறார்கள்.

பகையை மூட்டித்தான் கட்சிக்கு உறுதியாக இருப்பதைத் தெரிவித்துக் கொள்வது என்பது இயற்கையாக நரம்பு தளர்ந்து போன பிறகு தாது புஷ்டி லேகியம் சாப்பிடுவதற்கு ஒப்பானது. எவ்வளவு விரைவில் அந்த மருந்தினால் நரம்பு முறுக்கேறுகிறதோ அதைவிட வேகமாக அது தளர்ந்துவிடும்.

## மாதவி தேடிய கோவலன்:

ஒருவனுக்கு வெளியிடத்திலே—மனைவியை விட்டு வேறு தொடர்பு ஏற்பட்டு விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு அவன், தன் மனைவி அலங்காரம் செய்து கொள்ளக் கூடாதென்று இவனே விரும்புவான். வழக்கம்போல் மனைவி அலங்காரம் செய்து கொண்டால் வீட்டுக்குள் நுழைகிறபோதே அருவருப்போடு பார்த்து, "என்ன முகத்திலே அவ்வளவு பவுடர்?"—இவனே கேட்பான். இவன் எந்த இடத்தில் இருந்து வருகிறான் என்றால், அங்கே இருந்த பவுடர் உள்ளங்கையிலே ஒட்டியதற்கு சோப்பு போட்டுக் கழுவவேண்டும். அவ்வளவு பவுடர் கப்பிய இடத்திலிருந்து வருகிறான். அது அங்கே பிடித்தது. இங்கே தன்னுடைய மனைவி பவுடர் அடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், உனக்கேன் இவ்வளவு பவுடர்? என்று கேட்பான்.

## பூந்தோட்டத்தில் புயல்

பெருவாரியாக ஏழைகள், இடையே சிறு கூட்டம் செல்வவான்கள் என்றால் அதன் பொருள் என்ன? இன்று உணர மறுக்கின்றார்கள் உடைமைக்காரர்கள்.

பிரபுக்களைச் சூழ்ந்து கொண்டு பட்டினிப் பட்டாளம் நிற்கிறது என்றுதான் அதற்குப் பொருள். பிரபுவின் அலங்காரத்தை ஏழையின் அலங்கோலம் கேலி செய்யும். பிரபுவின் பன்னீர் வாடையை ஏழ்மையின் துர்நாற்றம் இருக்கும் இடம் தெரியாமல் அடித்துவிடும்! இல்லாதார் தொகை ஏறுகிறது.

இதன் உண்மையான கருத்து, சமூகம் எனும் மாளிகையின் சுற்றுச் சுவர் சரிகிறது என்பதுதான்! பூந்தோட்டத்தை நோக்கிப் புயல் வருகிறது என்று பொருள்.

## ஓரவஞ்சனைக் காட்சி

நடிப்புக் கலையிலே நாலாவது இடமும் பெற இலாயக்கற்ற நங்கையர், நயனத்தின் நடமாட்டத்தாலும், இன்சொல் பேசி இடையாட்டுவதாலும், அரை நிர்வாண அலங்காரத்தாலும், நட்சத்திரங்களாவது காண்கிறோம். அவர்களின் நடை முறையினைக் கண்டித்துப் பத்திரிகைகள் எழுதிடப் படிக்கிறோம். 'ஆமப்பா! அவள் எந்தப் படத்திலே நடித்தாலும் ஆபாசமான காட்சிகளாகத்தான் இருக்கிறது என்று பேசுகிறோம். சினிமாக்கலையின் சீர்கேட்டினைக் கண்டிக்கிறோம். ஆனால் கம்பனின் கலையிலே தேங்கிக் கிடக்கும் காமரசத்தைக் கண்டிக்க முன்வர மறுக்கிறோம். நா கூசுகிறது; நடுக்கம் பிறக்கிறது; ஏன் இந்த ஓரவஞ்சனை?

## தேவரசமா? காமரசமா?

ஆரியத் தோழர்கள் அகங் குழைந்து கூறுவரே, அரியக்குடி இராமானுஜம் ஐயங்காரின சங்கீத விற்பன்னத்தை. அதே அரியக்குடியே கூட, இழவு வீட்டிலே

போய், எதுகுல காம்போதி பாடினுல் என்ன கிடைக்கும் தோழர்களே? பரிசா? அதுபோல், மணவிழா மகிழ்ச்சி யின்போது தேசிகரின் தீந்தமிழிசை நடைபெறும் சமயத்திலே, அறுந்த தாலியை எண்ணிக் கொண்டு ஒரு அம்மாமி அழ ஆரம்பித்தால், கூடி அழுவார் களோ அம்மாமியுடன்? கோல் கொண்டன்றோ தாக்கு வர் அவளை! நிலைமைக்கேற்ற நிகழ்ச்சி இருக்க வேண்டும். அதுபோலவே கடவுட் கொள்கைக்கு எனக் கூறப்படும் காதையிலே தேவரசம் இருக்கலாம், பக்திரசம் கொட்டலாம். தேவ இரகசியங்கள் மிளிர லாம். இதையெல்லாம் விட்டு காமரசத்தைக் கொட்டு வது முறையா ?

## ஒரு மணங்கு வைரம் ஒரு ரூபாய்!

உழைப்பின் பெருமை எத்தகையது என்பது புரிந்ததய்யா எனக்கு; என் மனைவிக்கு குலைநோய்; மருந்து பெறச் சென்றேன்; சர்க்காரின் மருத்துவ மனை யில்; உழைப்பால் கிடைக்கும் பெருமையைத் தேடிப் பெற்றிடத் தெரியாத உடைமையாளன் ஒருவனுடைய மூன்ருந்தாரம் முத்துப் பல்லழகி வந்தாள். முதுகுப் புறம் அரிப்பு என்ருள்; மூன்று டாக்டர்கள் அந்த மருத்துவ மனையில். மூவரும் சென்று விட்டனர் அம்மையின் கட்டளைக்கு நடுங்கி. கால்கடுக்க நின் றேன்; கண்ணுல் சொன்னுன் காவலாளி போகச் சொல்லி; மறுத்தேன்; பிடரியைப் பிடித்து வெளியே தள்ளினுன். டாக்டரய்யாவைத் தொந்தரவு செய்யாதே என்று! பெருமை ஐயா! பெருமை! உழைப்பால் வந்த பெருமை!—என்ருெருவன் உருக்கத்துடன் பேசிடத் தலைப்படுவான்.

## மாற்றுச்சுவை ஏன்?

மதுக்கடையிலே மகேஸ்வர வணக்கமும் மகேஸ்வரன் கோயிலிலே மதுப் பிரசாதமும், பொருத்தமுடையதாக இருக்க முடியுமா? அது போலவேதான், தேவ கதையிலே, தெளிவற்ற மக்கட்கும் தெய்வீகத்தின் தன்மையைத் தெளிவாகத் தீட்டிக் காட்ட எழுந்த சரிதைகளில் காமச் சுவையைக் கலக்கி விடுவது கூடாது; கலக்கினாலும் ஒரு அளவு இருக்க வேண்டும்; நேரடியாகப் பள்ளி அறைக்கே வாசகர்களை இழுத்துச் சென்று, "ஆழ்ந்துபார்! சுவர்ந்துபார்!" என்று அடுக்கடுக்காகக் கூறுவது அடாது.

## பந்தலிலே பாவக்காய்

இழவு வீட்டிலே பலர் கூடி அழுகிறார்கள். அங்கே பந்தலிலே பாகற்காய் தொங்குகிறது. அதைப் பார்த்த ஒரு மாது மற்றொருத்தியிடம் அழுகையுடன் அழுகையாக,

> "பந்தலிலே பாவக்கா
> பந்தலிலே பாவக்கா"

என்று சேதி கூறிவிட்டாள். அதைக் கேட்டுக் கருத்தைத் தெரிந்துகொண்ட அந்த நங்கை, அதே அழுகைப் பாட்டு மெட்டிலே,

> "போகையிலே பார்த்துக்குவோம்
> போகையிலே பார்த்துக்குவோம்"

என்று போகும்போது பறித்துக்கொள்ளலாம் என்று 'பிளான்' கூறிவிட்டாள். வந்தது துக்கத்திலே கலந்துகொள்ள! அழுகைப்பாட்டு! அதிலே ஒரு திருட்டுக் கூட்டு! அதுவும் பாட்டிலே நடக்கிறது. இவ்வளவும்

இழவு வீட்டிலே! இந்த இருவர் மட்டுந்தான் இப்படியா? இல்லை! வந்தவர்கள் பாகற்காய் பறிக்கும் பிளான் போட்டதை அவர்கள் பாடியதனுல் கேட்டுத் தெரிந்து கொண்ட வீட்டுக்கார அம்மாள், "இதேது இழவிலே கலந்துகொள்ள வந்து, பாகற்காயை பறித்துக்கொள்ள நினைக்கிருர்களே" என்று பயந்து ஒரு எச்சரிக்கை விடுத்தாள் அழுகுரலிலேயே.

"அது விதைக்கல்லோ விட்டிருக்கு
அது விதைக்கல்லோ விட்டிருக்கு"

என்று, வீட்டுக்குடையவள் கூறிவிட்டாள். ஆக மூவரும் அழுததுடன், தத்தம் மனத்திலே தோன்றியதையும் கூறிவிட்டனர். அந்த இழவு வீட்டுக்குச் சென்ற இரு அம்மைகள், எவ்வளவோ மேல் என்பேன். ஏன்? அயோத்தி மக்களின் சோகத்தைக் காண கம்பர் அயோத்தியை அடுத்துள்ள ஓர் சோலைக்குச் செல்கிருர்...அவரோ அங்கு போயும், அந்த நேரத்திலும் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் நெக்குருகும் அந்த மேலிட மறைவிட மேன்மையைத்தான் கண்டு கதறுகிருர். அழுகுரலுடன், பாகற்காயைப் பறிக்கத் திட்டமிட்ட திருமதிகள் போலவே, கம்பரும் சோகத்தோடு சோகமாகத் தமது காமக் கள்ளையும் கவிக் கலயத்திலே ஊற்றித் தருகிருர்.

## காந்தி காட்டிய பாதையிலே

சாதாரண காய்ச்சலுக்கு, ஒரு வைத்தியர் கொடுத்த மருந்து பயனற்றுப்போய் வேருெரு வைத்தியர் கொடுத்த மருந்து வேலை செய்து சுரம் நீங்கி விட்டால், என்ன சொல்கிறேம்! முன்னவரின் முறை சரியில்லை, மருந்து பயனில்லை என்று கூறிவிடுகிறேமே. இதோ

ஒரு நாட்டின் நலிவை, மக்களின் நிலையை மாற்ற நமக்குத் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்தவர்களால் முடியாமற் போன பிறகு, அவர்களைப்போல 'நான் அற்புதம் புரிபவன்' என்று கூறிக்கொள்ளாமல், பணி புரிந்து, வெற்றிகண்டு, கடைசியில், நாட்டிலே வகுப்புமாச்சரியம் ஒழிந்து, புதுவாழ்வு ஏற்பட வேண்டும் என்பதற்காக உயிரையே கொடுத்தாரே ஓர் உத்தமர் (காந்தி), அவரைப் போற்றும் அதே வாயினுல், எப்படி அந்தப் பழைய சக்திகளின் பிரதிநிதிகளைப் புகழ்வது?

## காந்தியின் அணியும் கபடரின் அணியும்

முற்றும் துறந்த முனிவரின் சொந்த ஆஸ்தி இவை தான் என்று 'தினசரி'யில் ஒரு படம் வெளிவந்தது. காந்தியாரின் சொத்துக்களைக் காட்ட அந்தப் படத்தைக் கண்ட எவருக்கும் கண்ணீர் கசியாமலிராது! என்ன சொத்து? நூல்சரம், சிறு கரண்டி, தெர்மாஸ் பிளாஸ்க், ஒரு பவுண்டன் பேனு, ஒரு ஜதை காலணி இவை. அருள் பெற்றவர்கள், யோகமறிந்தவர்கள், மக்களின் மோட்சலோக வழிகாட்டிகள் என்றெல்லாம் விருது பெற்று, துறவு நிலையும் கொண்டிருப்பதாகக் கூறுபவர்கள் இன்னும் பலர் உள்ளனரே, அவர்களின் சொத்துக்களைச்சற்று உங்கள் மனக்கண்முன் கொண்டு வந்து பாருங்கள்—எவ்வளவு ஆடை ஆபரணம்—தங்கத்தால் வட்டில் தட்டு முதலியன மட்டுமா, பாதக்குறடே தங்கத்தால்! இவர்களையும், முற்றும் துறந்தவர்கள், முனிவர்கள், மக்களின் அன்புக்கு மட்டுமல்ல, ஆராதனைக்கும் பாத்திரராகக் கூடியவர்கள் என்று, இனியும் கொள்ள எப்படி மக்களின் மனம் சம்மதிக்கும்?

## சுவையற்ற வாழ்வு

சுவையற்ற வாழ்க்கையிலேதான் நல்ல பலன் காண முடியுமா? பண்டத்திலே உப்புச் சப்பேயில்லை, சுவையில்லை, மண்போல் இருக்கிறது என்று சலித்துக் கொள்கிறோமே! வீட்டுக் காப்பியிலே மணமில்லை, பால் அதிகம், விறுவிறுப்பும் இருப்பதில்லை என்று கூறி ஓட்டலைத் தேடுகிறோமே! பண்டத்துக்கும் பானத்துக்குமே இந்த அளவு சலிப்புத் தட்டும்போது வாழ்க்கைத் துணை வளமற்று, வறட்சி மிகுந்து, வம்பு வல்லடி நிறைந்து, வாழ்க்கைத் துணை தேடும் முக்கியமான காரியத்தைத் துவக்கத்திலேயே செம்மைப் படுத்திக் கொள்ளாமல் பிறகு, "தவறான வழி நாடாதே" என்று அபாய அறிவிப்புப் பலகைகளைத் தொங்கவிட்டு என்ன பலன் காண முடிந்தது? பொது மாதரைக் கூடுவது தீமை, பாவம், கேடு என்று எவ்வளவோ அறவுரைகள் கூறியும் கண்ட பலன் என்ன?

## சுதந்திரக் குழந்தை

யாரைப் பார்த்தாலும், எதைக் கேட்டாலும், 'சுதந்திரக் குழந்தை! சுதந்திரக் குழந்தை!' என்கிறார்கள். அந்தக் குழந்தைக்குப் பாலூட்டி விட்டால் மட்டும் போதாது. தாலாட்ட வேண்டும்—சொக்காய் போடவேண்டும்—விளையாட்டு காட்டவேண்டும்—இது அத்தனையும் தாயே செய்துவிட முடியாது. மாமன்மார் விளையாட்டுப் பொம்மைகள் வாங்கிவர, தங்கை தாலாட்டுப் பாட, உற்றார் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொஞ்ச—இவ்விதம் வளரவேண்டும் குழந்தை!

அப்படியில்லாமல், 'குழந்தையை நான்தானே பெற்றேன்' என்று சொல்லி, 'மற்றவர் எவரும் அருகில்

வரக்கூடாது' என்று பெற்றெடுத்த தாய் சொன்னால், குழந்தையை எவரும் சீந்தார்! குழந்தையின் அருமை பெருமையையும் அறியார்!! அது போலவே பிறந்த சுதந்திரக குழந்தையைச் சீராட்டி வளர்க்க எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் சந்தர்ப்பம் வேண்டும். குழந்தைக்கு, அடிக்கடி உணவு தந்து—அதிகமாகவும் தந்து—யாரிடமும் அண்டவிடாமல் சில பணக்காரக் குடும்பத்திலே வளர்க்கப்படும் குழந்தை கடைசியில் நோஞ்சானாகிவிடும்! டாக்டரிடத்தில் செல்ல நேரிடும்!

## உலகப் பெரியார்

இராமகிருஷ்ண அவதாரங்களோ ஆழ்வாராதி நாயன்மார்களோ, சித்தர்கள் ஜீவன் முக்தர்களோ தாங்கள் மக்கள் உருவிலே இருக்கும்போதே, மக்களின் சுபாவத்தை மீறிய சக்திகளைப் பெற்றிருந்தனர் என்று கதைகள் உள்ளன. பூதகியைக் கொன்றார், தாடகியைக் கொன்றார், காளிங்க மடுவில் குதித்தார், கடலுக்கு அணையிட்டார் என்பன போன்ற கதைகள் மூலம், அவர்கள் கடவுள் என்ற கருத்து பரப்பப்பட்டது— எனவே அவர்கள் புகழ் பெற்று விளங்கியதிலே, நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆனால், இந்த உத்தமர் (மகாத்மா காந்தி) மானிட குலம்—அந்தக் குலத்துக்கு எந்தவிதமான ஆற்றல் உண்டோ, அதே விதம் பெற்றோர்—இருந்தும், மானிட குலத்துக்கு வழிகாட்டி என்றும், உலகப் பெரியார் என்றும், எல்லா நாட்டிலேயும் போற்றப்படும் நிலையைப் பெற்றார். அவர் பெருமை இதிலேதான் இருக்கிறது.

## புராணப் பூச்சு வேண்டாம்

அழகிய ரோஜாவுக்கு, அற்புதமான வர்ணம் தீட்டிப் பார்க்க வேண்டாமல்லவா! நம்மைச் சொக்க

வைக்கும் மயிலின் தோகைக்கு, பட்டாடை போர்த்த தேவையில்லையல்லவா! முல்லைக்கு மணமும், தேனுக்கு இனிப்பும், நாம் கூட்டத் தேவையில்லையல்லவா! அது போலவேதான், எந்த உத்தமரின் மறைவு கேட்டு உலகம் உருகி அழுகிறதோ, அவருடைய உயர்வுக்கு அவருடைய குணமும் செயலும், அவர் பெற்ற வெற்றி களும், அதற்காக அவர் பட்ட கஷ்டங்களும், போது மான காரணங்கள்—அவருடைய பெருமையை விளக்க நாம் ஏதும் புராணப் பூச்சு போடத் தேவையில்லை.

## மனைக்கழகு மங்கை

பசியினால் களைத்துப் படுத்துத் துயிலும் புலியின் வாலை வேண்டுமானாலும் வளைத்து ஒடிக்கலாம். ஆனால் காதல் நோயில் சிக்கிக் கொண்டவனைத் தொந்தரவு செய்தால், அவன் புலியினும் சீறுவான், எதுவுஞ் செய்வான், எவர்க்கும் அஞ்சான், எதையுங் கருதான். ஆம்! இன்னமும், மனிதன் மாடமாளிகை கூட கோபுரத்தைவிட மங்கையின் அன்பையே பெரிதென எண்ணுகிறான் பொன், மணி பொருளைவிட தனது பிரியையின் புன்சிரிப்பே பெரிதெனக் கருதுகிறான். எதையும் இழப்பான், காதலை இழக்கத் துணியான். எது இல்லாமற் போய்விடினும், "இதுதான் நம் நிலை, என் செய்வது" எனத் தன்னைத்தானே தேற்றிக் கொள்வான். ஆனால் மனதில் குளிர்ச்சி ஊட்டும் மனோகரி ஒருத்தி இல்லையெனில் அவன் செத்த வாழ்வு வாழ்வதாகவே கருதுவான். பருவமும், பழக்க மிகுதியால் வரும் சலிப்பும் ஒரு சிறிது இக்குணத்தைக் குறைக்கலாம். அடியோடு மாற்றவதென்பதோ, அந்த குணமே வரவொட்டாது தடுத்துவிடுவதென்பதோ முடியாத செயலாகும். கிடைக்காவிட்டால் கிலேசப்

படும் உள்ளம், கிடைத்ததைக் கெடுக்க யாரேனும் முற்பட்டால், அவர்களைக் காலடி போட்டு மிதித்துத் துவைத்துவிடவே எண்ணும்.

## இலட்சியமே பெரிது

விடுதலைப் போர் நடத்தப்படும் காலம், நாட்டின் வரலாற்றிலே சுவையுள்ள பகுதி—வீரச் செயல்கள், தியாக நிகழ்ச்சிகள் நிரம்பிய பகுதி. குன்றுகள் கோட்டைகளாகி, வீதிகள் போர்முகமாகி, வீடுகளெல்லாம் பாசறையாகி, நாட்டு மக்கள் வீரர்களாகும் வேளை அது. அப்போதெல்லாம் அவர்களின் ஒரே நோக்கம், ஒரே லட்சியம், தன்னாட்சி பெறுவது என்பது தான். தோட்டத்துக்குள்ளே புகுந்த புலியை விரட்டி அடித்துக் கொல்ல வேண்டுமென, தோட்டக்காரர் தன் துணைவருடன் கூடி ஆயுதமெடுத்து, புலி தப்பி ஓடாதபடி நாற்புறமும் நல்ல முறையில் காவல் அமைத்து, தீரமாக உள்ளே நுழைந்து புலியுடன் போராடுகிற போது, எப்படியாவது இந்தப் புலியை அடித்துக் கொன்றுவிட்டால் போதும் என்ற ஒரே எண்ணம்தான் தோன்றும். புலி கொல்லப்பட்டதும், "அப்பா! கொன்றுவிட்டோம் புலியை, இனிப் பயமில்லை" என்ற ஆறுதல் தோன்றும் — ஆயாசமும் ஏற்படக் கூடும். அதுபோலவே பல்வேறு நாடுகளிலே, விடுதலைப் போர் நடந்த காலங்களிலெல்லாம், எப்படியாவது, நம்மை அடிமைப் படுத்திய அன்னிய ஆட்சியை ஒழித்து நாட்டிலே நன்னாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணம், ஒரே இலட்சியமே தலை சிறந்து விளங்கிற்று.

## வீணனுக்கு அடங்கிய வீரன்

ஆச்சரியமான பல உண்மைகள் உலகில் உண்டு. பெரியதோர் யானை; பித்துப் பிடித்ததுபோல் ஓடும், எதிர்ப்பட்டோரையும் தாக்கும். அதன் கலகத்துக்கும் கோபத்துக்கும் காரணம்தெரியாமல், மக்கள் திகைப்பர். கடைசியில் பார்க்கப் போனால், அதன் காதிலே புகுந்து கொண்ட சிறு வண்டு செய்த சேட்டையால் குன்றென உடல் படைத்த கரி, அங்ஙனம் ஆடி அலைந்து, ஆபத்தையும் உண்டாக்கிற்று என்பது தெரியவரும். மிருகங்களிலே மட்டுமென்ன மனிதர்களிலேயும் இந்த விசித்திரம் உண்டு. வீராதி வீரனாயிற்றே இவன், எப்படி ஒரு வீணனிடம் அடங்கிக் கிடக்கிறான் என்று ஆச்சரியப்படுவோம் சில சம்பவங்களைக் காணும்போது. ஆனால், கொஞ்சம் ஆராய ஆரம்பித்தால் தெரிந்து கொள்வோம் ஒரு துடியிடைக்கு அந்த வீணன் தூது போகிறவன் என்ற சூட்சமத்தை நமக்கு அவள் ஒரு மாது; அவன் ஒரு வீணன்; ஆனால் அந்த வீராதி வீரனுக்கோ அவள் இன்பம்; அந்த வீணன் இன்ப புரிக்கு அவளை அழைத்துச் செல்பவன்; எனவே இன்ப புரியில் குடியேறிய வீரன் யாரால் அந்த இன்பபுரி வாசம் தனக்குக் கிடைத்ததோ அவனை வீணன் என்று எப்படிக் கருதுவான்! அவன் மற்றவர்களுக்கெல்லாம் வீணன்தான்! அவனுக்கு அப்படி அல்லவே! விலை மதிக்கொணாத இன்பத்தையன்றோ அவன் அந்த வீரன் பெறும்படிச் செய்தான். இந்த 'மர்மம்' சுலபத்திலே வெளிவரக் கூடியதல்ல. சொன்னாலும் பலர் நம்ப மாட்டார்கள். ஆனால் இப்படிப்பட்ட, ஏதாவது ஒரு மர்மம் இருந்தாலொழிய வீராதி வீரர் பலர், மிகச் சாமானியர்களிடம் அடங்கி நடப்பதன் இரகசியம் தெரிந்து கொள்ள முடியாது போய்விடும்.

## அழகுக்கு ஆலவட்டம்!

மயிலும் மாதரும் தமது அழகை பிறர் காண வேண்டுமென்ற எண்ணத்துடன் இருப்பதாக கவிகள் கூறுவர். மயிலின் தோகை அவ்வளவு வனப்புடன் இருக்கும்போது அது பிறர் கண்களுக்குத் தெரியாமல் மறைந்து கிடப்பின் பயன் என்ன? கண்டோர் மனதில் களிப்பை உண்டாக்கும் ஒப்பற்ற பணியை அழகு செய்கிறது. அந்த அழகு, அன்றலர்ந்த பூவிலுண்டு! அந்தி வானத்திலுண்டு, கிளியின் கொஞ்சுதலில், குயிலின் கூவுதலில், மயிலின் நடனத்தில், மாதரின் சாயலில் உண்டு! சிற்பத்தில் உண்டு, ஆனால் அதன் சிறப்பை முழுதும் காணவல்லார் மிகச்சிலரே. ஆனால் மாதரின் எழில் அத்தகையதன்று அது கண்டவரை உடனே களிக்க வைக்கும் தன்மையது. காற்று வீசும் போது குளிர்ச்சி தருகிறேன் பாரீர் எனக் கூவுமா! அதன் செயல் நமக்கு அந்த இயற்கையான எண்ணத்தை உண்டாக்கும். அதுபோலவே எந்த மாதும், என் அழகைக் கண்டாயோ எனக்கேளார். ஆனால், தம் அழகைப் பிறர் கண்டனர், களித்தனர், என்பது அவர்களுக்குத் தெரியும். அதிலே பூரிப்பும் பெருமையும் அடையாத பெண்கள் மிகமிகச் சொற்பம்.

## மொழி எமக்கு விழி

நம்முடைய மொழியை நாம் கண் போலக் காத்து வருகிறோம்; அந்தக் கண்ணில் சிறு துரும்பு பட்டாலும் எரிச்சல் காணத்தான் செய்யும்; அதனால் உடல்கூட எரிச்சல் காணுவது போல் இருக்கும்; அந்த நேரத்தில் யாரேனும் ஏதாவது கேட்டால் எரிந்து விழுவோம்;

நம் கண்கள் கோபத்தால் மேலும் சிவந்திருக்கும்; இது பட்டவர்களுக்குத் தெரியும்!

கண்ணுக்கு மையிடுவது போல் பிற மொழிகளைப் பயன்படுத்த வேண்டும்; மை அதிகமானால் கண்ணை எப்படி அரித்து விடுகிறதோ அதுபோல், பிறமொழிகள் அதிகம் கலப்பதும் ஆபத்தான நிலையை உண்டாக்கும்!

நம் கண்கள் இப்பொழுது சிவந்திருக்கின்றன; ஆனால், கோபாத்தால் சிவந்ததல்ல— அழுது அழுது சிவந்திருக்கின்றன! இதை மத்திய அரசிலுள்ள பெருந் தலைவர்கள் உணருவார்களானால், மொழிப் பிரச்னை தீர்ந்துவிடும்!

## ஈன்ற தாயும் கர்ப்பவதியும்

பத்துமாதம் சுமந்து பெற்ற குழந்தையை அன்னை முத்தமிடுகின்ற நேரத்தில், ஆறுமாத கர்ப்பவதிக்குக் கொஞ்சம் அருவருப்பாகக்கூட இருக்கும். ஆனால் எனக்கிருக்கின்ற நம்பிக்கை எதிலே என்றால் அவளும் ஆறுமாத கர்ப்பவதியே தவிர மலடி அல்ல ஆகையி னாலே குழந்தை பிருக்கும். இன்றையதினம் பிறந்த குழந்தையை முத்தமிடுகின்ற] தாயைப் பார்த்துத் தன்னுடைய அடிவயிற்றிலே தன்னையும் அறியாமல் கரம் சென்று விரல் ஒவ்வொன்றாக எண்ணி ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்று எண்ணி இன்னும் நான்கு மாதத்திற்குப் பிறகு அல்லவா நம் முடைய கருவிலிருந்து ஒரு குழந்தை பிறக்கும். அப்போதல்லவா நாம் எடுத்து மகிழ வேண்டும் என்று எண்ணிக் கொள்ளுகின்ற ஆறுமாதக் கர்ப்பவதி போல் இக்கூட்டத்தின் ஓரத்திலே உள்ள மாற்றுக்கட்சித் தோழர்கள் நம்மிடம் கொஞ்சுகின்ற காலம் விரைவில்

வரும்; இதற்கு இடையிலே அவர்களுக்குப் பத்துமாதம் சுமந்து பெற்ற குழந்தையைத் தாய் கொஞ்சுகின்ற நேரத்தில் குழந்தை இன்னமும் பிறக்காமல் இடுப்புவலி மட்டும் எடுத்துக் கொண்டிருக்கும் தாய் கொஞ்சம் அருவருப்பு அடைவதைப் போல் அருவருப்பு படுவார்களோ, ஏன் அவ்வளவு நல்லவர்களை நீங்கள் சங்கடப் படுத்துகிறீர்கள் என்பதுதான் எனக்கிருக்கின்ற அச்சமே தவிர வேறு ஒன்றுமல்ல.

## கூட்டுறவே நாட்டுயர்வு

கட்டிடத்தைத் தாங்கிடத் தூண்கள் தேவை. அந்தத் தூண்களும் போதுமான அளவு பருமனுடன் இருந்தால், கட்டிடத்திற்கும் பலம்—பார்ப்பதற்கும் அழகாக இருக்கும்! அவ்விதம் இல்லாமல் தூண்கள் வேண்டும் என்பதற்காக சாதாரண அளவைவிடப் பத்து இருபது மடங்கு அளவில் தூண்களை நிறுவினால், கட்டிடத்தின் அழகும் போய்விடும்—இடமும் இருக்காது!

அது போல கூட்டுறவுத் துறையில் அரசினர் பணமும், மக்கள் பணமும் இருக்கிறது என்பதற்காகச் சிலரைப் பொறுப்பில் விட்டால், அவர்கள், நாம் கூறிய அழகிய—சிறிய—பலமுள்ள தூண்களாகவே இருக்க வேண்டும்; ஆனால் சில இடங்களில் தூண் இருக்கும் அளவுக்குக் கட்டடம் இல்லை! இந்த முறையை நீக்குவதில் நாம் பெறுகிற வெற்றியைப் பொறுத்துத்தான் கூட்டுறவு இயக்கத்தின் வெற்றியே இருக்கிறது!

## தமிழகத்தின் இருண்ட வரலாறு

இன்றைய தினம் ரோம் நாட்டு வரலாற்றை நீங்கள் துருவிப் பார்க்க வேண்டுமென்றால் ஜூலியஸ்

சீசர் அணிந்து கொண்டிருந்த கால் செருப்பின் அளவிலேயிருந்து, கிளியோபாட்ரா அணிந்திருந்த காதணிவரை வரலாற்றுக் குறிப்பு உண்டு. ஆனால் தமிழகத்தின் வரலாற்றை நீங்கள் பார்க்க வேண்டு மென்றால், இந்த மண்டலத்திலே ஆண்டு கொண் டிருந்த மன்னன் இன்னாருடைய மகன் என்று கூறுவ தற்கு இரண்டு மூன்று வரலாற்று ஆசிரியர்களும், நான்கைந்து தமிழ்ப் புலவர்களும், பத்து பதினைந்து திங்கள் சேர்ந்து உட்கார்ந்தாலும், ஆளுக்கொரு செய்தியைத்தான் தர முடியுமே தவிர, அத்தனை பேரும் ஒத்த கருத்தைத் தர முடியாத ஒரு நிலை இருக் கிறது. அதற்குக் காரணம் புலவர்களிடையே புலமைக் குறைவு என்று அர்த்தமல்ல. நம்முடைய முன்னோர் கள் மனிதர்களுடைய செயல்களைக் குறித்து வைப்பது இழுக்கு என்ற ஒரு தவறான கருத்திலே குறித்து வைக்காமல் போய்விட்டார்கள்.

## இழுக்கில்லா வழக்கு

ஒரு வழக்கறிஞன் நீண்ட நேரம் பேசித்தான் ஒரு வழக்கை நிலை நாட்ட முடியும் என்றால், அந்த வழக்கிலே ஏதோ தவறு இருக்கின்றது என்று பொருள்; ஆகையினாலே நீண்ட நேரம் பேசினால்தான் தீர்ப்புக் கிடைக்கும் என்று சொல்லத்தக்க அளவுக்கு, என் னுடைய வழக்கு இழுக்கு நிறைந்ததல்ல; அப்பழுக் கற்ற வழக்கை நான் நாட்டு மக்களிடம் எடுத்து வைத்துக் கொண்டு வருகின்றேன்; அந்த வழக்கு நாட்டு மக்கள் முன்னால் இருந்து வருகின்றது. நம் முடைய வழக்கிலே அப்பழுக்கு இல்லை என்று நான் சொன்னேன். நம் வழக்கிற்கு நாம் ஆதாரத்திற்கு காட்டுகின்றவைகள் அத்தனையும் வரலாற்றுத்

துணுக்குகளும், இலக்கியச் செறிவு நிறைந்த சம்பவங்களும், கல்வெட்டுகளிலே காணக் கிடக்கின்ற கருத்து நிறைந்த சம்பவங்களும், இவைகளையெல்லாம் ஆதாரமாகக் கொண்டுதான் நாம், நம் வழக்கை நாட்டு மக்கள் முன்னாலே வைத்திருக்கின்றோம்.

## கடவுளரின் செயல்

முசுலீம் ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழுகிறான் என்றால் அதுவும் அவனுக்குப் பெருமைதான். ஏன்? அவன் கடவுள் உருவம் அற்ற அரூபி. அவனுடைய வழி காட்டி முகம்மது நபி மக்களுக்காக மக்காவிலிருந்து மதீனா வரை ஓடினார்; விஞ்ஞானத்தை நீக்கி அறிவைப் புகட்டினார் ஆனால் நம்முடைய கண்ணன் காட்டிய வழியோ! சிறு வயதிலே வெண்ணெய் திருடி மத்தடி உண்டான்; சற்றுப் பெரியவனான போது கோபிகளுடனே பற்பல லீலைகள் புரிந்தான்; சேலைகள் திருடினான்; பின் ராதை ருக்மணி முதலியோரை மணந்தான்; கடைசியாகப் பாரதப் போரிலே சிறந்த இராச தந்திரத்தைக் கண்டான். நான்கு வருணத்தை நான் தான் படைத்தேன் என்று கீதை செய்தான். இந்த வழி நல்ல வழியா? இது நமக்குத் தேவையா?

## அரசியல் மருத்துவன்

ஊசிக்குழாயினை கையில் பிடித்துக் கொண்டே, "எல்லாம் ஆண்டவன் செயல்; நம் கையில் என்ன இருக்கிறது?" என்ற நம்பிக்கையுடன் நோயாளியை அணுகுகையில், "இப்போதைக்கு வலி நின்றால் போதாதா! அப்புறம் என்ன வேண்டுமாம்? இன்னும் வலிக்கிறது என்றால் மீண்டும் ஒரு தடவை வந்து

போயேன்" என்று கூறும் டாக்டர்கள் நாட்டில் அநேகம் பேர் உண்டு.

நோயையும் கண்டறிந்து அதன் மூல காரணத்தையும் ஆராய்ந்து - நிரந்தரமாக நலிவைப் போக்கும் முறைதான் சிறந்தது-தகுந்தது. அரசியலில் இத்தகைய மருத்துவர்கள் கிடைப்பது அரிது! கிடைத்தால் பெரும் பேறுதான்!

## காட்டிக் கொடுக்கும் கயவர்கள்

உடலிலேயேதான் நோய் தங்கி இருந்து உடன் இருந்தே கொல்லுகிறது; பாசி குளத்திலேயேதான் உண்டாகிறது. களை வயலிலேயேதான் முளைக்கிறது; காட்டிக் கொடுப்போரும் அது போன்றே நமது சமுதாயத்திலேயே உள்ளனர். மினுமினுப்புடன் மிடுக்குடன் துரைத்தனத்தாரின் மேய்ப்புத் தேய்ப்புப் பெற்று காட்டுக்குதிரைக்கு ஏது, தங்கமுலாம் பூசப் பட்ட கடிவாளம்? இல்லையல்லவா? நாட்டிலே பூட்டு கிறார்கள் விலையுயர்ந்த கடிவாளம் குதிரைக்கு எதற்கு? தாம் ஏறிச் செல்லும் வண்டியை அக்குதிரை இழுத்துச் செல்ல வேண்டுமே! காண்போர் எப்படிப்பட்ட விலை யுயர்ந்த குதிரை என்று கண்டு, அதனை உடைய வரைப் பாராட்ட வேண்டுமே. அதற்காக! அதுபோல, தமிழரில் சிலர் உளர். அவர்போன்றோர் மனம் மாறிடல் வேண்டும்; தமிழ் போற்றிடல் வேண்டும்; பொற்காலம் காண!

## புண்ணுக்குப் புனுகு

காண்கின்றோம் கைகட்டி வாய் பொத்தி நின்றிருந்த நிலை இல்லை. எங்கும் நம்மவர்களே அரசோச்சுகின்றனர்! எழில் மாடக் கூடங்கள் தொழிற்

சாலைகள், அறிவாலயங்கள், மருத்துவ மனைகள், புதிய பாதைகள், பாங்கான பணி மனைகள் எழுப்பியுள்ளனர்! உற்பத்தி பெருகி நாட்டுப் பொதுச் செல்வம் வளருவது தெரிகிறது. ஆனால் இவைகள் பளிச்சிட்டுக் கொண்டிருக்கும் போதே, பிறிதோர் புறம் சேரிகள், சகதி நிறைந்த இடங்கள் – கூரைகள், குமுறிக்கிடக்கும் மக்கள், வேலையில்லாதார் தொகை நெளிந்திடக் காண்கிறோம். பாதைகளையும் பள்ளங்களையும் பாங்கான மாளிகைகளையும் சிங்காரத் தோட்டங்களையும் வெள்ளையர்கூட அமைத்தனர்—ஓரளவு. ஆனால் இவை பளபளப்பூட்டும் முறை. புண்ணுக்குப் புனுகு பூசும் வழி.

## நாசவேலை கூடாது

நாசவேலையைச் செய்யாதீர்கள் என்று சொன்னால் அர்த்தம் இருக்கிறது—நாசவேலையைப் பத்தாண்டு செய்யாதீர்கள் என்றால் பதினோராவது ஆண்டில் அதற்கு உரிமை கொடுக்கின்றார் என்று பொருளா? நான் சாப்பிட்டு வருகின்றேன்; அதற்குப் பிறகு கொட்டு என்று தேளுக்குச் சொல்லுவார்கள்.

தேள் கொட்டும் என்று தெரிந்தால் அது எப்போதும் கொட்டாமல் பாதுகாப்பு தேடவேண்டும்—நாசவேலை நாட்டிலே நடக்கும் என்று தெரிந்தால் நாசவேலை அடியோடு கூடாது என்று சொல்ல வேண்டுமே தவிர பத்தாண்டுகளுக்கு நாசவேலை வேண்டாம் என்றால் என்ன பொருள்?

## காங்கிரஸ் பூசாரி

எப்பொழுதுமே உங்களுக்கு ஒன்று நான் சொல்லுவேன். காளியாயி வரங்கொடுக்காது என்பது பக்தனைவிடப் பூசாரிக்குத்தான் நன்றாகத் தெரியும். பூசாரி

ஏதோ உடுக்கை அடிக்கிறானே என்று நீங்கள் எண்ணு கிறீர்கள். அவன் வயிற்றுப் பிழைப்புக் கொடுமை யாலே உடுக்கை அடிக்கிறானே தவிர அவனையே நீங்கள் தனியாகக் கேளுங்கள். காளியாயி வரப்பிர சாதமா என்று—உங்களுடைய மடியை முதலிலே பார்ப்பான். பார்த்த உடனே நீங்கள் தேங்காய் கற்பூரம் வைத்துக்கொண்டிருந்தால் ஆகா இது கண் கண்ட தெய்வமாயிற்றே! கந்தசாமிக்கு காளியாயிதான் கைகொடுத்தாள்—சாமிக்கண்ணுக்கும் காளிதான் கண் கொடுத்தாள்—என்று சொல்லுவான்.

மடியிலே ஒன்றுமில்லாமல் விசாரிக்க மட்டும் கேட் டால்—உடனே திருப்பி அவனே கேட்பான் என்னடா பைத்தியக்காரனாக இருக்கிறாய்? காளி சக்தி வாய்ந்த வளானால் என்னை ஏன் இந்த நிலையிலே வைத்திருக் கிறது? எங்கள் தகப்பன் பூசாரி, நானும் பூசாரி, என் மகனும் பூசாரி-இதுதான் இந்தக் காளியாயினுடைய சக்தி. என்னையே கைதூக்கிவிடாத இந்தக் காளி உன்னை எங்கே கைதூக்கிவிடப் போகிறது என்று பூசாரி சொல்வான்.

## தெனாலிராமன் சித்திரம்

இப்பொழுது நாம் இருக்கிற நிலை எப்படியிருக்கிற தென்றால் தெனாலிராமன் சித்திரத்தைப் போல் இருக் கிறது. தெனாலிராமன் சித்திரம் என்றால் உங்களுக்குத் தெரியும். மன்னன் கூப்பிட்டு உனக்குச் சித்திரம் எழுதத் தெரியுமா என்றான்-தெரியும் என்றான்- அப்படி யானால் எழுது என்றான்—அதற்கு ஒரு மாளிகை தரச் சொன்னான்—சித்திர வேலைப்பாடு முடிந்ததும் மன்னன் தெனாலிராமனை அழைத்துக் கொண்டு போனான்— சுவரைப் பார்த்தான்; அழகான கண் மட்டும் இருந்தது.

இதென்ன கண் இருக்கிறதே மூக்கு எங்கே என்று கேட்டான். இதோ பாருங்கள் என்று அழைத்துக் கொண்டுபோய் இன்னொரு பக்கத்திலே காட்டினான்—மூக்கு மட்டும் இருந்தது. கண் வரையிலே அழகாகத் தான் இருந்தது. மூக்கு வரையிலே அதுவும் அழகாகத் தான் இருந்தது. இன்னொரு பக்கத்திலே தோள் இருந்தது-இன்னொரு பக்கத்திலே தாள் இருந்தது. இன்னொரு பக்கத்திலே உடல் இருந்தது. வேறொரு பக்கத்திலே சில உறுப்புக்கள் அழகழகாக எழுதப்பட்டிருந்தன-அவை ஒன்று சேர்க்கப்படவில்லை-ஏன் என்று கேட்டதற்குத் தெனாலிராமன் சொன்னான் நான் அந்தந்த உறுப்புக்களை எவ்வளவு அழகாக எழுதுகின்றேன் என்பது மொத்தமாக எழுதினால் கண்டு பிடிக்க முடியாதல்லவா? இதோ கண்ணைப் பாருங்கள் அழகாக இருக்கிறதல்லவா? எனக்குக் கண் நன்றாக எழுதத் தெரியும் - இதோ மூக்கு நன்றாக எழுதத் தெரியும் அல்லவா-என்று எடுத்துச் சொன்னான் என்று ஒரு பட்டிக்காட்டுக் கதை சொல்வார்கள்.

தமிழனுடைய அறிவு இன்றையதினம் தெனாலி ராமன் சித்திரத்தைப் போல சிதைந்து சிதைந்து இருக்கிறது. இதெல்லாம் ஒரே கோட்டுக்குள்ளே கொண்டு வரப்பட வேண்டும்... அப்பொழுதுதான் தமிழன் நல்வாழ்வு பெறுவான்.

## சுயகலவாதியின் சூது

மனித சமுதாயம், ஆராய்ச்சிப் பள்ளிக்கூடம் அமைக்காதபோது இது போன்ற நிலைதான்—எதைப் பார்த்தபோதும்—எந்தப் பொருளைப் பற்றியும் பொருள் தெரிகிறது கண்ணுக்கு—பொருள் விளங்குவதில்லை, கருத்துக்கு! பொருள் விளங்காததால், பயன் கிடைப்பு

தில்லை மனித சமுதாயம் நஷ்டமடைகிறது, தெளிவு இல்லாத காரணத்தால். நம் வீட்டு மாட்டுத் தொழுவத்திலேயே ஒரு சிறு கட்டை இருக்கிறதே—சிறு மரத் துண்டு—அது என்ன என்பது தெரியாத நிலையில், அதனால் பெறக்கூடிய பலன் கிடைக்காதல்லவா! பிறகு ஒரு நண்பன் பார்க்கிறான், அந்த மரத்துண்டை! அவனுக்குத் தெரிகிறது, அது சந்தனக்கட்டை என்று—எனவே அதனால் பெறக்கூடிய பலனையும் தெரிந்து கொள்ளுகிறான். அவன் சுயநலக்காரனாக இருந்தால் என்ன செய்வான்? "இந்தச் சிறு விறகு உனக்கு வேண்டுமா?" என்று கேட்பான்—ஆவலை மறைத்துக் கொண்டு, அலட்சியப் போக்காக "எனக்கு ஏன்? இது இங்கு நெடுநாளாகக் கிடக்கிறது, இடமடைத்தானாக!" என்கிறான் விளக்கமிலான். சுயநலவாதி, "இதை நான் எடுத்துக் கொண்டு போகிறேன்—வீட்டிலே ஒரு கதவுக்கு தாளாக்க!" என்று கூறிவிட்டு அதை எடுத்துக் கொண்டு போகிறான். என்றைக்கேனும் ஓர் நாள், பூசிக் கொள்ளச் சந்தனம் கொடுப்பான்—பூசிப் பூரிப்படையும்போது கூட விளக்கமிலான் சுயநலவாதியின் சூதை அறிந்து கொள்ள மாட்டான்! அறிவீனம் தரும் நஷ்டம்! அதைச் சுயநலவாதி பயன்படுத்திக் கொள்கிறான் தன் சுகபோகத்துக்காக.

ஆப்பிரிக்க நாட்டுப் பழங்குடி மக்கள் விளக்கம் இல்லாத காரணத்தால் தங்கள் நாட்டிலே கிடைக்கும் வைரங்களை வெள்ளையர்களுக்குக் கொடுத்து விளையாட்டுச் சாமானும் சோப்பு சீப்பும் வாங்கிக்கொண்டார்களல்லவா! அதுபோல், மனித சமுதாயத்தில் முதலில் விளக்கம் பெறாததால் பயன் கிடைக்காத நஷ்டமும், விளக்கம் பெற்று ஒரு சில சுயநலவாதிகளால் பெரு நஷ்டமும், ஏற்பட்டதுண்டு.

## மனைவி தரும் இனிய காட்சி

"காலையிலே கண்ணாளா! கடை வீதியிலிருந்து தாங்கள் அனுப்பிய, புதுப்புடவை! எப்படி இருக்கிறது. அதனை நான் அணிந்து கொண்டிருக்கும் காட்சி" என்று கலாபம் இல்லாமலேயே மயிலென விளங்கிடும் குயில் மொழியாள் பேசிடக் கேட்டு உள்ளத்தரசன் உவகை அடைகிறான்! இனிய காட்சி காண்கிறான்! களிப்பு அடைகிறான்! இல்லை என்பார் இல்லை! ஆனால், தம்பி, குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்புணர்ச்சி தட்டி எழுப்ப, உழைத்துப் பிழைத்துப்போ! என்று உறுமிடும் முதலாளியின் குரல் போல ஆலைச்சங்கொலி இழுத்திட, தொழிற்சாலைக்குச் செல்லும் நேரத்தில் துயரால் தாக்கப்பட்டு, தொல்லைகளைத் தாங்கித் தாங்கி, தவித்துக் கிடக்கும் அவன் துணைவி அழுக்கேறிய ஆடையுடன் அலங்கோலமாக இருக்கக்கண்டு மானென்றும் மயிலென்றும், மாடப்புறா வென்றும், பாடாத பைங்கிளி, வாடாத முல்லை, தெகிட்டாத தேன்! என்றெல்லாம் கதையும், கவிதையும் கூறத்தான் செய்கின்றன! இளமை தரும் எழிலுடன், உழைப்பு அளித்த உருவ அமைப்புடன்தான், இவள் என்னை மணம் புரிந்து கொண்ட நாளன்று இருந்தாள்! இன்றோ! இளைத்து, களைத்து, இளமைக்கட்டுக்கள் குலைந்து ஓயாத உழைப்பும், அதற்குத் தேவையான அளவுக்கு வலிவூட்டமளிக்கும் உணவு படிப்படியாகக் குறைந்த திறல் வலிவினை இழந்து நிற்கிறாள். ஆடையிலே பொத்தல்—அழுக்கேறி இருக்கிறது! நான் உழைக்கத் தான் செய்கிறேன், கடுமையாக உழைக்கிறேன், கடமை உணர்ச்சி குன்றாமல் உழைக்கிறேன், இவளைக் களிப்புடன் வாழ்ந்திட வைக்கவேண்டும் என்ற எண்ணத்தைத் துணைக்கு அழைத்தபடி நான்

உழைக்கிறேன், எனினும் கிடைக்கும் ஊதியம் போது மானதாக இல்லை; உருக்குலைந்து கிடக்கிருள்! அழுக் கேறிய ஆடை—அதிலும் பல பொத்தல்! என்று—எண்ணிக் கவலை குடையும் மனத்தினனுகித்தான் ஆலை செல்கிருன். மாலை அவன் வீடு திரும்பும்போது, ஆடையின் அழுக்கு போக்கப்பட்டு...மெத்த பக்குவ மாக உடுத்திக் கொண்டு, புன்னகை தவழும் முகத் துடன், அவன் துணைவி வரவேற்ருல் அதிலே கிடைக்கும் இனிமை, அந்தக் காட்சி தரும் இனிமை—காலையில் கடை வீதியிலிருந்து வாங்கி அனுப்பிய புதுச்சேலையை உடுத்திக்கொண்டு, மாலையில் மகிழ்ச்சி யுடன் நிற்கும் மனைவியைக் காணும்போது ஏற்படும் இனிமையைவிட, அதிகமா, குறைவா?

## குடியரசு நாள்

மாதவி வீட்டில் கண்ணகி வந்திருந்து மஞ்சள் அரைத்துக் கொடுக்கிருள். என்றைய தினம் என்ருல், எந்த வெள்ளிக்கிழமை, கண்ணகி வீட்டை விட்டு விட்டு கோவலன் மாதவி வீட்டுக்குப் போனுனே அந்த ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்ற அன்றைக்கு! இதற்கு எவ்வளவு பொருள் இருக்கும்? அந்த அர்த்தத் தில் நடத்தி இருக்கிருர்கள். உலகத்திற்கெல்லாம், நாங்கள் இந்தியாவுக்குக் குடியரசு தந்து விட்டோம், இந்தக் குடியரசில் ஜனநாயகம் தழைக்கும். மக்கள் எல்லாம் வாழ்வு பெறுவார்கள், உலகோரே கண் ணெடுத்துப் பாருங்கள். அமெரிக்காவே எங்களுக்கு லாலி பாடு. ரசியாவே எங்களுக்கு உபசாரத்தை நடத்து. எகிப்தே எங்களோடு நட்பாக இரு, என்றெல்லாம் சொல்லுவதற்குக் கொண்டாடுகின்ருர்களே குடியரசு விழா—சனவரி 26—அதே குடியரசு நாளில்தான் வால்

பாறை மலையில் 'கூலி போதவில்லை எங்களுக்கு' என்று கூறினால், குலை அறுந்து போகும்படியாக ஐந்து பேரைச் சுட்டுக் கொன்றார்கள்.

## வீரன் காணும் இன்பம்

வாளின் கூர்மை அறிந்தால் வீரன் இன்புறுகிறான். ஆனால் அவன் முழு இன்பம், கூர்வாள் கொடியோனின் மார்பிலே பாய்ந்து அவன் கீழே வீழ்ந்திடும் போதன்றோ ஏற்படும்! ஆம்! என்கிறாய், கேட்கிறது. ஆனால் தம்பி, தூய்மையான இன்பம், சுவையுடன் பயனும் கலந்ததான இன்பம், கூர்வாள் கொடியோனைக் குத்திக் கொன்றிடுவதிலே அல்ல, கூர்வாள் கொண்டோன்! குறியில் திறனுள்ளோன்! அஞ்சாது போரிடும் ஆற்றல் படைத்தோன்! இவனிடம் போரிட்டு வெற்றி காண இயலாது. எனவே ஆற்றலுக்கு அடங்குதலே சாலச் சிறந்தது இவன் போன்ற வீரர், கொடுமை நடமாட விட்டு வைக்க மாட்டார்கள். கொடுமை இனி நிலைக்காது. நீதிக்காகப் போரிட, நேர்மை நிலைத் திருக்கப் போரிடும் ஆற்றல் மிக்கோர் எழுந்து விட்டனர். இனி நம் கொட்டம் பலிக்காது'' என்பதனை உணர்ந்து கொடுமைக் குணத்தையே அவன் விட்டொழித்திட, நல்வழிப்பட உறுதி காட்டுகிறானே, அப்போதல்லவா தனியானதோர் இனிமை உள்ளத்தில் எழும்.

## மூடக் கதைகள்

வேடன், கையிலே வில்லும் முதுகிலே அம்புறாத் தூணியும் வைத்துக் கொண்டு போனால் ஆச்சரியப் படுவார் இல்லை—ஆனால் விலையுயர்ந்த மோட்டாரில் அமர்ந்து கொண்டு நாகரிகமான உடை அணிந்து கொண்டு வில்லும் அம்பும் ஒரு விசித்திர புருஷன்

வைத்திருக்கக் கண்டால் எவ்வளவு ஆச்சரியம் ஏற்படும். அதுபோலத்தான் மனிதகுல முன்னேற்றத்திற்கு முன்பு சிந்தனைத்திறம் தெளிவு படுத்தப் படுவதற்கு முன்பு கிரேக்க நாட்டவர் மற்றப் பல நாட்டு மக்கள் போலவே, அறிவுக்கு ஒவ்வாத, ஆபாசம் நிறைந்த கதைகளை எல்லாம் நம்பி ஆலயம் அமைத்து, 'ஆத்திகராக' விளங்கினர்- அவர்களெல்லாம் அறிவு பெற்று, தெளிவு பெற்று, அஞ்ஞானத்தை விரட்டி விட்டு மெய்யறிவுத் துறையிலே மேலானதோர் இடம் பெற்று, உண்மையான கடவுட் கொள்கையையும், மார்க்கத்தையும் உணர்ந்தறிந்து, கற்பனைகளைக் களைந் தெறிந்தான பிறகும், நம் நாட்டிலே, நாகரிகத்தின் மேல்பூச்சைக் கொண்ட மட்டும் எடுத்து பூசிக் கொண்டு, கோலத்தை மாற்றிக் கொண்டு, உலகத்தோடு உறவாடிக் கொண்டு உயர்ந்தோம் என்றும் வீம்பு பேசிக் கொண்டு, கடவுட் கொள்கையிலேயும், மார்க்கத் துறையிலும், மாடனையும் காடனையும், மன்னுரையும் மாரியையும், போரும் போட்டியும், போக போக்கியத்துக்காகக் கூறும் கதைகளையே சிறப்புகளாகக் கொண்ட பல்வேறு கடவுர்களையும், அன்று போல நம்பும் போக்கில் உள்ளனர்! இஃதன்றோ ஆச்சரியம்!!

## வாய் சர்க்கரை கை கொக்கரை!

வெட்டுக்காயத்தில், அரைத்தெடுத்த மிளகாயை அப்பிவைத்து, உலக் கூடத்திலே இருக்கச் செய்து விட்டு "பாக்யவானடா நீ! உனை ஆளும் வேந்தன், வெண்ணெயால் பல்விளக்கி பன்னீரால் வாய் கொப்பளித்து சுத்தம் செய்த பிறகுதான், தங்கக் கோப்பையில் கனிரசம் ஊற்றிப் பருகுவாராமே என்று

சொன்னால் எப்படி இருக்கும்? அதே நிலைதான் தமிழருக்கு! அல்லலும் அவமானமும் தமிழருக்கு-ஆனந்த வைபவமும் அரசாங்க மரியாதையும் நேரு பண்டிதருக்கு. கண்ணால் பாரும் எமது புண்களை—என்று கூறத் தமிழர் துடிப்பர்-காதால் கேளும் என் பஞ்சசீல உபதேசத்தை என்று மட்டுமே பண்டிதர் கூறிட நினைப்பர்.

## நடைபாதை வியாபாரி

"ஊதுகுழல் வேண்டுமா, ஊதுகுழல்?" என்று கேட்டான், நடைபாதை வியாபாரி.

வேண்டாமப்பா என்று கூறினான், அவ்வழியே சென்றவன்.

பொத்தான் வேண்டுமா?
பேனா வேண்டுமா?
சாக்லெட் வேண்டுமா?
சாயப்பவுடர் வேண்டுமா?

சோப்பு, சீப்பு, கண்ணாடி, ப்ரோச், பின் வேண்டுமா ?—என்று வியாபாரி, விடாமல் கேட்டுக் கொண்டே யிருந்தான்.

அவ்வழி வந்தவருக்குப் பெருத்த தொல்லையாகி விட்டது. அவர் அங்காடி வந்தது எதையும் வாங்க அல்ல; யாரையோ சந்திக்க, வியாபாரி, விடாமல் தொல்லை கொடுக்கக்கண்டு, அவர் கோபத்துடன்,

ஒன்றும் வேண்டாமப்பா, போய்த்தொலை! ஒரே தலைவலியாகி விட்டது உன்னாலே என்றார்.

அருமையான தலைவலி மருந்து இருக்கிறது! ஆறே அணா? வேண்டுமா! என்று கேட்டானும், வியாபாரி,

தம்பி! அந்த ஆசாமியின் சகிப்புத் தன்மையில் பெறத்தக்க பாடம் இருக்கிறது.

## குழந்தைத் தொல்லை

திருவிழாக் காலத்தில் சாமியைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் பசிக்கின்ற குழந்தை தாயைக் கேட்கின்றது ஏதாவது வாங்கித்தரச் சொல்லி. அந்த நேரத்திலே தாய்க்குக் குழந்தையினுடைய பசி தெரியாது, எதிரிலே இருக்கின்ற திருவிழாக் கோலந்தான் தெரியும். அந்தக் கோலத்தைப் பார்த்துக் கொண்டே பசியோடு இருக்கின்ற குழந்தை பிராண்டுகின்ற நேரத்தில் தொல்லை தருகிறாயே என்று அடித்துத் தாயே தன்னுடைய குழந்தையைத் தவறாக நினைக்கின்ற நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்களை நாட்டையாளுகின்ற அமைச்சர்கள் தவறாகக் கருதுவார்கள் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தாய் தன்னுடைய குழந்தையை பசிக்கின்றது என்று தெரிந்தும் அது தொல்லை தருகின்ற காரணத்தால் கண்டிப்பதானால் நாங்கள் செய்கின்ற நல்ல காரியத்தையும்—தொல்லையென்று அமைச்சர்கள் கருதக்கூடும்.

## ஏழைப் பெண்

ஏழையினுடைய வீட்டில் அழகான பெண் பிறந்தது. அவள் 16—வயதாகி, திருமணம் ஆகாவிட்டால் அந்த ஏழையினுடைய உள்ளத்தில் எப்படிக் கவலை தோன்றுமோ அதைப்போல வளர்ச்சியடைந்த இயக்கத்தைப் பார்க்கின்ற நேரத்திலெல்லாம் நான் கவலையடைகின்றேன். ஏழையினுடைய வீட்டில் பெண் பிறந்தால் ஆபத்து; அந்தப் பெண் அழகாகவும் இருந்தால் அதிகமான ஆபத்து!

உங்களுக்கு நான் சொல்லுவேன்—நான் சொன்ன அந்த ஏழை, தன்னுடைய வயிற்றிலேயே பிறந்த நல்ல அழகான பெண் பருவமடைந்து விட்டாள் என்று தெரிவதற்கு முன்னாலேயே, அவள் பருவமடைவாள்—திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பிறக்கின்ற பொழுதே. அவன் தான் கஷ்டப் பட்டு சேர்க்கின்ற சொத்தில் கொஞ்சம் கொஞ்சம் மிச்சப்படுத்தி, 'அடுத்த தைக்குக் கல்யாணம்—அடுத்த தைக்குக் கல்யாணம்' என்று சேர்த்து வைப்பதைப் போல், இங்கே கூடியிருக்கின்ற நீங்களும், இங்கே வர முடியாமலிருக்கின்ற மற்றவர்களும் சீமான்களல்ல என்பது எனக்குத் தெரியும்; நீங்களெல்லாம் கஷ்டக் குடும்பத்திலே உள்ளவர்கள்—நான் உணர்ந்திருக்கின்றேன். நாமெல்லாம் நடுத்தரத் குடும்பத்தார்கள்—இதிலே ஒருவர்க்கொருவர் பெருமை பேசிக்கொள்ளத் தேவையில்லை; கஷ்ட ஜீவனத்தில் இருப்பவர்கள்—ஆனாலும், ஏழை எப்படி தன் மகளுடைய திருமணத் திற்காகக் கொஞ்சம் கொஞ்சம் பணத்தை அவ்வப் போது சேர்த்துக்கொண்டு வருவானோ அதைப் போல் நீங்களும் சேர்க்க வேண்டும்.

## கிருஸ்துவும் இஸ்லாமும்

கிருஸ்தவருக்கோ ஒரே ஒரு பிதா பரமண்டலத் திலுண்டு. இஸ்லாமியருக்கோ ஒரே கடவுள் அதுவும் உருவமற்ற அரூபி. ஆனால் நமக்கோ, மூலக்கடவுளர் மூவர். அவருக்குக் குடும்பங்கள் பல; அதிலும் நிரந்தரக் குடும்பங்கள் சில. தற்காலிகக் குடும்பங்கள் பல. உதா ரணமாக சிவனுக்குப் பார்வதியும், கங்கையும் நிரந்தரக் குடும்பங்களாகும். தற்காலிகக் குடும்பங்களோ தாருக வனரிசி — பத்தினிகளைப்போலச் சமயச் சந்தர்ப்பங் களுக்கு ஏற்றவாறு இருக்கும்.

ஏன் இதைக் கூறுகிறேன்?—நமக்கும் கிருஸ்துவனுக்கும், இஸ்லாமியனுக்கும் கடவுள் உணர்ச்சியில், தன்மையில் உள்ள வேற்றுமையைக் காட்டித்தான், நம்முடைய கடவுட்தன்மை கயமைத்தனமாக உள்ளது—கபோதித்தனமாக உள்ளது என்பதை உறுதிக்காட்டத் தான் இவ்வித கயமைத்தனத்தையும், கபோதிக்குணத்தையும் விடுத்துக் கடவுளைச் சர்வ வியாபாகன், உருவமற்ற அரூபி, அருளுடையவன் என்று ஏன் கூறலாகாது? இதற்குப் புராணமேன்? மதம் ஏன்? மக்களிடை மாற்றம் (சாதிபேதம்) ஏன்? கடவுளைப் பற்றிய இந்தத் தீர்ப்பு நல்ல தீர்ப்பா! நவிலுங்கள் நாட்டோரே.

ஆண்டவனுக்குப் பேசும் சக்தியிருந்து அவன் உங்களிடம் பேசுவதானால், அது ஒன்றே ஒன்றாகத் தானிருக்கும். ஆண்டவன் நயவஞ்சகமற்றவரானால், அன்புடைய அறம் மிகுந்த தந்தையரானால் அவர் கேட்பார், நான் இந்த அகில உலகை, அண்ட சராச் சரங்களைப் படைத்தேன், அதிலே ஜீவராசிகளைப் படைத்தேன், நெல்லைப் படைத்தேன், நீரைப் படைத் தேன், முத்தெடுக்கும் முறையைப் படைத்தேன் உன்னிடம்; அதைத் தடுக்க திமிங்கலத்தைப் படைத்தேன்; எதையும் எண்ணிச் செய்யப் பகுத்தறிவைப் படைத் தேன் உனக்கு. அதன் மூலம் பாராள்வாய் பலரும் வாழ வகை செய்வாய் என நினைத்தேன். அதைவிட்டு நீ எனக்கு அரைவீசை வெண் பொங்கல் தந்து வரம் வேண்டுகிருயே! வகையற்ற மூடனே! அறிவைக் கொண்டு ஆவன செய்!'' என்றுதான் கேட்பார்.

## பிரம்மனின் பூசை

சரஸ்வதிக்குத் தந்தையும் பிரம்மனே, கணவனும் அவரே. மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் என்ற

தத்துவத்தைப் பிரம்மன் தனது காமத்துக்குத் துணை செய்து கொண்டார் போலும். சிருஷ்டிக் கர்த்தாவைப் பற்றி கதை சிருஷ்டித்தவன், அவருக்கு சீலத்தை, சாந்தத்தை, ஒழுக்கத்தைச் சூட்டியிருக்கக் கூடாதா! பூலோகத்தில் பிதா என்ற பட்டத்தை யாருக்குச் சூட்டினரோ, அந்தப் பிதாவின் காமப்பித்தம், பெற்ற மகளைப் பெண்டாளும் அளவுக்குச் சென்றதாகக் கதை எழுதிப் பிறகு அப்படிப்பட்ட பிரம்மனைப் பூஜை செய்ய வேண்டும், அந்தப் பிரம்மனின் கட்டளையே குலதர்மம் என்று கூறுவது எவ்வளவு போக்கிரித்தனமான புரட்டு.

## பார்வதி தேவி

பார்வதி தேவியைத் தொட்டிழுத்த துரோகியைத் தேவனென்றும், மூவரில் ஒருவனென்றும் கூறும் மத வாதியைக் கண்டிக்க அகராதியிலே சரியான பதமும் கிடைக்குமா? காட்டுமிராண்டியும் அத்தகைய காரியம் செய்தவனைக் கண்ணால் காண மறுப்பான். இங்குக் கடவுளென்று, காமுகனைக் கயவனைச் சிவத் துரோகியைக் கை கூப்பித் தொழுகிறார்கள். இதற்குப் பெயர் பக்தியாம்!

## யார்க்குத் தேவை

தீய செயல் புரிபவன் தெய்வமல்லவே! தீய செயல் செய்ததாகக் கதையும் கூறிவிட்டுப் பிறகு அச் செயலினை தெய்வமென்று கூறினால், மதி தேய்ந்தவர் தவிர மற்றையோர் ஏற்பாரோ? ஊர்வசி ஆடினாலும் திலோத்தமை பாடினாலும், பார்வதி கண்ணில் பட்டாலும் கௌரியைக் கண்டாலும், மகளே எதிர்ப் பட்டாலும், இந்த மகாபுகவனுக்கு காம வெறி பிடித்து

விடுகிறது. இப்படிப்பட்ட காம வெறி பிடித்தலையும் கடவுள்கள் யாருக்குத் தேவை?

## பெருச்சாளி வாகனம்

விநாயகருடைய உருவத்தைக் கவனி! மனித உடல், மத்தள வயிறு, ஒற்றைத் தந்தம். நமது கடவுளின் உருவம் இதுவென்று கூறிப்பார் நாகரிக மக்களிடம். வயிறு குலுங்க நகைப்பர். அவருக்கு வாகனம், பெருச்சாளி! இது கேட்டால் எவன்தான் இந்த மக்கள் தன்னுட்சிக்கு இலாயக்குள்ளவரென்று கூறத்துணிவார்! உலக மக்களின் பிரதிநிதிகள் கூட்டமொன்று நடந்தால் அதற்கு உச்சியில் குடுமியுடையோனும், கழுத்திலே மண்டையோட்டு மாலையுடையோனும், காட்டெருமை முகத்தோனுமாகப் பலர் சென்றால், மற்ற நாகரிக உருவங்கள் நகைக்காதா? நீங்களே கூறுங்கள்! சுந்தரிகள் பலர் சொகுசாக ஆடிப்பாடும் வேளையிலே, மந்தி முகவதி வந்தால், கை கொட்டிச் சிரிக்க மாட்டார்களா! ஏசுவின் உருவம் எத்தகைய கருணைபொழியுங் கண்களைக் காட்டக் காண்கிறோம். புத்தர் உருவின் முகப் பொலிவையும் சாந்தியையும் நோக்கு. பக்கத்திலே பெருச்சாளிவாகனின் உருவத்தை நினைத்துப்பார்! கடவுளர்கள் காட்சி எனும் கூத்திலே கணபதி, ஒரு விதூஷகராகவே பாவிக்கப் படுவார்.

## நாயகியுடன் நாயகன்

கரி முகத்தோடு ஒரு கடவுள், நாக்கிலே நாயகியுடன் ஒரு கடவுள், நடனமாடும் மயில்மீது மற்றோர் கடவுள், அலைகடல்மீது ஆலிலைமேல் துயிலும் வேறோர் கடவுள், தலைமீது தையலுடன் பிறிதோர் தேவன், என்ற இன்னோரென்ன கடவுள்கள் இருந்து கொண்டு

இன்னின்னவருக்கு இன்னின்ன விதமான நிலைமை இருக்க வேண்டுமென்ற ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வாழ்கிறார்கள் என்பதை இன்றும் நம்பி, அந்த நம்பிக்கைக்கேற்ற நாள் நட்சத்திரம் வைத்துக் கொண்டுள்ள மக்களிடத்திலே கான்ஸ்ட்டி டியூவண்ட் அசெம்பிளி பற்றியும், காரல் மார்க்சின் கருத்துப்பற்றியும், புரட்சி பற்றியும் பேசுகிறார்களே.

## கோயில் ஏன்?

நமக்கு கடவுளுணர்ச்சி வேண்டுமாயின் அது மாற்றியமைக்கப்படல் வேண்டும்; கயமை—கண் மூடித்தனமற்றதாக இருக்க வேண்டும், எல்லாம் வல்ல எம் பெருமானுக்குக் கோயில் ஏன்? குளம் ஏன்? குடும்பம் ஏன்? கூத்திகள் ஏன்? காணி ஏன்?—பூமி ஏன்? என்று தான் கேட்கிறோம். இவைகளால் எவ்வளவு பணம் பாழ்!

## ஒரு ஜோதி

நெறியில்லாதவனுக்கு நெறி காட்ட, ஒளி காணாதவனுக்கு ஒளிகாட்ட ஒரு ஜோதி ஆண்டவன்.

அசுத்தமான உலகில், சுத்தமாக இருக்கவேண்டும் என்பதை விளக்க, அநாகரிக உலகில் நாகரிகப் போதனையின் நாதனாக விளங்க கபடம் வஞ்சகம், காய்ச்சல் முதலியன கொண்ட உள்ளத்திலே, கருணை, நேர்மை, அன்புடைமை முதலிய அருங்குணங்கள் உண்டாகச் செய்ய ஒரு குருநாதன்—ஆண்டவன்! எங்கும் நிறைந்து எந்தச் சக்தியும் பெற்று—எல்லையில்லாத இன்பத்தின் வடிவமாகி, சத்திய சொரூபியாகி உள்ள பரமன் ஆண்டவன்!

## யானைத் தலையான்

விநாயகர், பார்வதியின் கர்ப்பத்திலே இருக்கையில் ஒரு அசுரன், காற்று வடிவில் கருவிருக்கும் இடம் சென்று குழந்தையின் தலையைக் கொய்துவிட, உடன் பரமன், அந்தத் தலை போனாலென்ன இதோ ஆனைத் தலை இருக்க அருள்கிறேன் என்று பாலித்திட, யானை முகத்தோடு குழந்தை பிறந்தது என்று, விநாயகர் உயிர்ப்பித்தாராம்! உயிர் வரச் செய்யும் உத்தமர், பழைய மனிதத்தலையை மட்டும் வரவழைக்க அறியார் போலும். என்ன மடமை.

## ஏசுவும் முகமதுவும்

இந்து மார்க்கத்தில் தவிர, ஏனைய இஸ்லாமிய, கிறிஸ்துவ மார்க்கங்களிலே, கடவுள் கதை ஏந்தியோ கத்தி தாங்கியோ, சக்கரம், சூலம், வேல், வில் ஆகிய வைகள் ஏந்திக் கொண்டோ இருப்பதில்லை எனவே 'பக்தர்கள்' பாடு பட்டால், வாகனமேறி வந்து சக்கரத்தை ஏவி, பாவியின் சிரசைத் துண்டிக்கச் செய்து 'பக்தனே! மெச்சினேன் உன் திறத்தை! பரமபதம் வந்து சேர்!' என்று அழைப்பதில்லை.

ஏசுவிடம்—அவருடைய மார்க்கத்தைச் சேர்ந்தவர் தனக்கு இன்னலும் இழிவும், பழிச் சொல்லும் பகைவர் தாக்குதலும் வந்துறும்போது, முறையிட்டால் என்ன சொல்லுவர்! "என்னைச் சிலுவையில் அறைந்தனர் அறியாயோ! உன் கொள்கைக்காக, உனக்குக் கஷ்டம் விளைவித்தால், யார் என்ன செய்ய முடியும்! கொள்கையிலே உறுதி இருந்தால், சுடு நெருப்பும் குளிரும். அதாவது உன் மனப் பக்குவம்தான் உன் மனத்துக்குத் துணை—வெளி உதவி கிடைக்காது. தேடாதே!" என்றுதானே கூறமுடியும்.

முகமதுவிடம் முறையிட்டால் அவர் மச்ச கூர்ம அவதாரம் எடுத்துப் பழக்கப்பட்டவரா—எனவே அவரும் வந்து ரட்சிக்க முடியாது! மெக்கா மெதினு பாதையிலே என்மீது வீசப்பட்ட கற்கள் கொஞ்சமல்ல! உலகம் உன் கொள்கையின் உயர்வை உணர்ந்து பின்பற்றும் வரையிலே உன்னைத் துன்பந்தான் தழுவும். அதைச் சகித்தலே "வீரம்" என்ற சன்மார்க்கமே போதிப்பார்.

## ஆமாம்! ஆமாம்!

கடவுள்தான்! ஆனுல் கடவுளருக்கும் பிறப்பும் இறப்பும் உண்டென்ருல் புராணிகன்—ஆமாம் சாமி, என்றனர் மக்கள்—பக்தர்களாக இருந்தால்! இப்போதும் இங்கு எதைத்தான் புராணிகன் சொல்லாமலிருக்கிருன்—நம்பத்தகாதது என்று எதைத்தான் பக்தர்கள் ஒதுக்கித் தள்ளிவிடுகிருர்கள்; மகேசன் செயலால் மலர் மணம் வீசும் என்று புராணீகன் சொன்னுல் ஆமாம்! ஆமாம்! நமது 'பாவம்' காரணமாகத்தான் நமக்கு மலத்திலிருந்து மலர் மணம் வீசவில்லை, இதை வெளியே கூறுவதும் அவமானம். எனவே நாமும் நாலு 'பேருடன்' ஒத்துப் பேசுவோம் என்று எண்ணிக் கொண்டு, ஆஹா! என்ன மணம்! என்ன மணம்! என் அப்பன் அருளல்லவா இது! என்று கூறிட இன்னும் இங்கு பக்தர்கள் இருக்கத்தானே செய்கிருர்கள்.

## பார்வதிக்கு திருமணம்

பார்வதியாருக்குத் திருமணம், அதற்குப் பிரமன் புரோகிதன்! முகமூடி அணிந்த அந்த மணப்பெண்ணின் கால் பெருவிரலை மட்டுமேதான் பிரம்மா கண்டாராம் அந்தத் திருவிரலின் அழகைக் கண்டதும், ஆஹா!

விரலே இப்படி இருக்கும்போது, பாதம் எவ்வளவு அழகாக இருக்கும். பிற பிற...என்று யோசித்தாராம் பிரம்மன்! காமாந்தகாரராஞர்! திருமணத்துக்காக மூட்டப்பட்ட ஓமக்குண்டமே அணைந்துவிட்டதாம். அவருடைய கெட்ட எண்ணத்தின் விளைவின் காரணமாக, எப்படி இருக்கிறது கடவுளின் யோக்கியதை?

## தேசபக்தன்

நாட்டுக்குழைத்தோருக்கு வந்த ஆபத்துக்கள் ஆபத்துகளாகவேதான் இருந்தன; கல்க னியாகவில்லை. தூக்குமேடை துளசி மாடமாகிவிடவில்லை. பகவத்சிங் பிணமாகாமலிருக்கப் பகவான் அருளவில்லை திருப்பூர் குமரனைத் தடிகொண்டு தாக்கியபோது, பாண்டியன் தந்த பிரம்படி, அண்டபிண்ட சராசரம் முழுவதும் பட்டதுபோன்று அற்புத நிகழ்ச்சி ஆண்டவன் அந்த இளைஞனைக் காப்பாற்றவில்லை, சிதம்பரஞர் செக்கிழுத்தபோது, நந்தன் தூங்கும்போது சிவகணங்கள் உழவு வேலை செய்ததுபோலச் சிதம்பரஞர்வசம் விடப்பட்ட செக்கு அவனருளால் தானகச் சுற்றவில்லை, அவரேதான் இழுக்க நேரிட்டது. பக்தர்களின் வாழ்க்கை வரலாற்றுக்கும், கொள்கைக்காகப் பணி புரிந்தவர்களின் வரலாற்றுக்கும், இந்த மாபெரும் வித்தியாசம் இருப்பதை மனதிலிருத்திப் பார்த்தால்தான் ஊருக்குழைத்தவர்களின் மாண்பு உள்ளபடி விளங்கும்.

## மன்னன் தண்டிக்கிருன்

சோழ மன்னனுக்குக் கட்டவேண்டிய பொருளை முன்பே, திருமங்கை திருப்பணிக்குச் செலவிட்டார்—மன்னன் தண்டிக்கிருன் — உடனே பக்தனைக் காப்பாற்ற மகாவிஷ்ணு அப்பனே காஞ்சிபுரத்தில் வேகவதி

ஆற்றோரத்தில் பொருள் புதைத்திருக்கிறேன். போய் எடுத்து, கப்பம் செலுத்திவிடு என்று திருவருள் போதிக்கிறார். அதேபோலப் போய்ப்பார்க்க, புதையல் இருக்கிறது. மாணிக்கவாசகருக்கும் ராமதாசருக்கும் இதே போல, அரசாங்கப் பொருளை அவர்கள் ஆலயப் பணிக்குச் செலவிட்டு விட்டபோது, அருள் கிடைத்திருக்கிறது!! இந்த அருள் திருமங்கைக்குக் கிடைத்தான பிறகு, ஆலயம் அமைக்க, களவு, வழிப்பறி, பிறமதத்தவரின் புனித இடத்தைக் கொள்ளையிடுவதுபோன்ற செயலில் ஈடுபடத்தான் வேண்டுவா?

## மதுரையில் சொக்கநாதர்

மதுரையில் சொக்கநாதர் ஆலயத்தில் அம்மையும் அப்பனும் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கின்றனர். திடீரென்று அப்பன் எழுந்தார். அம்மை கேட்க, ஒரு பக்தன் நம்மை நாடி வருகிறான்; அவனை 'ஆட்கொள்ள வேண்டும்' என்று கூறி விடைபெற்று அம்மையோடு விண்ணிலே சென்றார். அவனது பக்திக்கு மெச்சி பக்தன் செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தம் கூறினார். அது என்ன? பொற்றாமறை குளத்திலே மூழ்கு! பசுவுக்கு அறுகம்புல்லைப் போடு! ஆலயத்தை மும்முறை வலம் வா! நீ செய்த பாவம் தீர்ந்து எம்மை அடைவாய் என்றார். பக்தன் அவ்வாறே செய்து பரமன் அருள் பெற்றான். எப்படிப்பட்ட பக்தன்! பஞ்சமா பாதகஞ் செய்த பக்தன்; தந்தையைக் கொன்று தாயைப் புணர்ந்த பக்தன்; இப்படிப்பட்ட பக்தனுக்கு அரனின் அருள் அரைக்கணத்திலே கிட்டும்! ஏன்? அவன் பார்ப்பனன். இது கைலாய தீர்ப்பு! இது பக்தியாசாரத் தீர்ப்பா? அல்லது ஜாதியாசாரத் தீர்ப்பா?

## தங்க ஓடு

பணம் கோயில்களிலே நகையாய், வாகனமாய் நிலமாய் முடங்கிக் கிடக்கிறது. இந்த முடக்கு வாதம் தீர்ந்தால் முடிவுறும் வறுமை, கொடுமை இல்லாமை என்பனவெல்லாம், இது எதை உணர்த்துகிறது? இந்த நாடு ஏழை நாடு என்பதையா? எப்படி ஏழை என்று கூற முடியும். இங்கில்லை? தில்லைக் கூத்தரின் தங்க ஓடு வேய்ந்த சந்நிதானத்தையும், வரதரின் வைர நாமத்தையும், காஞ்சி காமாட்சியின் வைடூரியக் கற்களையும் அரங்கநாதரின் அற்புத ரத்தினங்களையும் வேங்கடத்தானின் பத்து லட்சம் பெறும் வைர முடியையும், காணும்போதும், கேட்கும்போதும்—அதிலும் இந்தத் திரவியம் எவ்வித நலனுமின்றி மூலையில் முடங்கிக் கிடக்கின்றது ஒருசில சாமி (ஆசாமி)களின் உல்லாச வாழ்வைக் கருதி என்பதை அறிந்த பிறகு—இந்த நாட்டை ஏழை நாடென்று எவராவது கூற முடியுமா? பொருளில்லையா இந்தநாட்டில்? இருக்கிறது. யாரிடம் பொருள் உள்ளது? மதத்தின் பெயரால் கோயிலாகவும் வாகனமாகவும் ஆண்டவன் சொத்தாகவும் அடைந்து கிடைக்கிறது அந்தப் பொருள் பிறவி முதலாளிமார்களைக் (ஆரியரை) கொழுக்கவைக்கப் பயன்படுகிறது. பரமன் பேரால் உள்ள பணம் அதிர்வெடிக்கும் அலங்கார ஆர்ப்பாட்டப் பூசைக்கும், தேருக்கும் திருவிழாவிற்கும் உபயோகமாகிறது—அநாவசியமாக, அர்த்தமற்று, இது நீதியா? முறையா?

## பத்தாம் மாதம் பாலன்

பக்தி தேவை—பக்தி செலுத்தி முக்திக்கு வழி பெறத் துடிக்கட்டும்—வேண்டாம் என்பார் யாருமில்லை.

ஆண்டவன் அருள்பெற, வாழ்க்கையை—இல்லற மெனினும்—ஒழுங்காக நடத்துவது, பிற உயிர்களிடம் உள்ளன்பு கொள்வது, உதவி புரிவது, பிறரைக் கெடுக்கும்—பேய்க் குணத்தை ஒடுக்குவது, இவை போதும்! இந்த முறையில் ஒருவன் வாழ்க்கையை நடத்திவந்தால் இறைவன் திருவருள் கிட்டத்தானே செய்யும்! பத்தாம் மாதம், பாலன் பிறக்கப்போகிருன்—குறி தெரிகிறது. அதற்குள் பதைப்பானேன், முறை யற்ற செயலைச் செய்வானேன், அதற்குக் காரணம் பிள்ளைக்கனி அமுதின் மீது பிறந்த அளவிட முடியாத பாசம் என்று பித்துப் பேச்சு பேசுவானேன்?

## நம்பத்தகாத புராணம்

உலகிலேயே பொதுவாக ஏற்பட்டுள்ள அறிவு வளர்ச்சி, புராண இதிகாசங்களிலே உள்ளவைகள் பொய்யுரைகள் நம்பத்தகாதன, என்ற தெளிவைச் சாமான்யர்களுக்கும் அளித்து விட்டது. ஆகாய விமானம் வந்தான பிறகு, அரி கருடன் மீதும், அரன் காளைமீதும் வருவர் என்று எவ்வளவு மதக்கோலத் துடன் அமர்ந்து கூறினாலும், கேட்போர் நம்பமாட் டார்கள்! இந்நிலையில் புராண இதிகாசங்கள் அறிவு வளர்ச்சி ஏற்படாத நாட்களிலே, மக்கள் உள்ளத்தை எந்த அளவுக்கு ஆட்சி செய்தனவோ, அதுபோல் இப்போதும் ஆட்சிசெய்ய இயலும் என்று எண்ணுவது அறியாமையாகும்—அந்த அறியாமை சிலருக்குப் புராண இதிகாசங்களிடம் உள்ள பாசத்தால் ஏற்படு கிறது. வேறு சிலருக்கு, அதனால் ஆதாயம் ஊட்டு கிறது—இரு சாராராலும், பொதுமக்களை பழைய நிலைக்குக் கொண்டுசெல்ல முடியாது.

## நமது குறிக்கோளும் நாம் திரட்டும் வலிவும்!

தேங்காயை தேவாலயத்துக்கு எடுத்துச் சென்று உடைத்து அர்ச்சனை செய்யச் சொல்லி ஒரு முடியை அர்ச்சகருக்குக் கொடுத்துவிட்டு, இன்னொரு முடியை வீட்டுக்குக் கொண்டு செல்பவர்களும் உண்டு.

இன்னும் சிலர், வீட்டு விசேடத்தின்போது 'திருஷ்டி' கழிப்பதாகக் கூறி, நடுவீதியில்—சூறைக் காய் உடைப்பது போல—உடைப்பார்கள்; அதைப் பொறுக்கச் செல்பவர்களில், சாமர்த்தியம் உள்ள வனுக்கு நல்ல தேங்காய் கிடைக்கும்; மற்றவர்களுக்கு வெறும் ஓடுதான் கிடைக்கும்.

இன்னொரு விதமும் உண்டு—தேங்காயைத் தாய் மார்களிடம் கொடுத்தால், அதை உடைத்துப் பதமாகத் திருகி, 'எந்தப் பண்டத்திலே சேர்த்தால் இனிப்போடு சுவை தரும் என்பதறிந்து, பக்குவமாகச் சேர்த்துப் படைப்பார்கள்.

## அவர்கள் யார்?

திரௌபதை துகில் கட்டுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவன் துர்ச்சாதனன் என்றால், திரௌபதைக்கு என்றைய தினம் துணி கிடைக்கும்?

திரௌபதைக்கு எந்தத் துகில் தேவை என்பதை தருமன் சொன்னால் ஏதோ கொஞ்சம் நாட்டுச் சேலையை யாவது வாங்கித் தந்திருப்பான்; அர்ச்சுனன் சொன்னால் கொஞ்சம் அலங்கார சேலை வாங்கிக் கொடுத் திருப்பான் துரியோதனனோ துர்ச்சாதனனோ சொன்னால்

எந்தச் சேலை கிடைத்திருக்கும்? இருக்கிற சேலையையும் உருவினவர்களல்லவா அவர்கள்?

"அதுபோன்று, இருக்கின்ற அரசியலைப் பறித்துக் கொள்ளும் வடநாட்டுக்காரன், 'உங்களுக்கு எந்த மொழி தேவை?' என்று கேட்பது, துச்சாதனனைப் பார்த்து, 'திரௌபதைக்கு எந்தச் சேலை வாங்கலாம்?' என்று கேட்கின்ற அத்தகைய வெட்கங்கெட்ட கதையைப் போன்றதுதான்! ஆகவேதான், அப்படிப் பட்ட விதி ரத்து செய்யப்பட வேண்டும் என்கிறோம் நாம்!"

## வலுவிருந்தால் வாக்கெடுப்பு நடத்து!

வைதீகக் கல்யாணம்போல் அல்லவா அவர்கள் நடவடிக்கைகள் இருக்கின்றன? பெண்ணிடத்திலே ஒரு வார்த்தைகூடக் கேட்காமல், விடியற்காலையில் கணவனைக் கொண்டுவந்து உட்காரவைத்திருக்கும் நேரத்தில், அவன் ஒருகால் நொண்டியாக இருந்து சாய்ந்து சாய்ந்து வந்தால், மணப்பெண் கண்கலங்கி, 'என்ன, ஒரு கால் இழுத்திருக்கும்போல் இருக்கிறதே' என்று தோழியிடத்திலே சொன்னால், 'இல்லை, வாழைப் பழத் தோலை மிதித்தார்' என்று பொய்ப் பேசி, கழுத்திலே தாலி கட்டியதுபோல, நாங்கள் தூங்கிக் கொண்டிருந்த நேரத்தில்—தமிழர்கள் ஏமாந்திருந்த நேரத்தில்—உலகமெல்லாம் உன்னைக் கவனித்துக் கொண்டிருந்த நேரத்தில் — சனநாயகம் வளராத நேரத்தில்—எங்கள் தம்பி சம்பத் பார்லிமெண்டில் இல்லாத நேரத்தில்—தூங்குகின்ற நேரத்தில் உள்ளே நுழைந்த கள்வனைப்போல், நீ இந்தியைப் புகுத்தி யிருக்கிறாய்; இப்பொழுது ஆண்மை இருந்தால் ஓட்டு எடு—இந்தி திணிக்கப்படவேண்டுமென்று, இந்தி

பேசாத மக்கள் பகுதியில் உனக்கு வக்கு இருந்தால் வல்லமையிருந்தால் ஓட்டு எடு!

காமராாசருக்கு நல்ல வேளையாகப் பிள்ளை இல்லை ஆகையால், அந்த வீட்டில், எனக்கு ஓட்டு கிடையாது. பக்தவத்சலம் வீட்டிலேயே எனக்கு ஓட்டு உண்டு; அவர் வீட்டுப் பிள்ளைகள் எனக்குத்தான் ஓட்டு போடுவார்களே தவிர, பக்தவத்சலத்திற்கு ஓட்டுப் போடமாட்டார்கள்!

## உலக வரலாறு

'வளமையினருகே வறுமை. பலத்தினருகே பயம்; இது ஏன்?' இந்தக் கேள்வி சாதாரண மக்களையல்ல கருத்துலகின் காவலர்களாக விளங்கியவர்களை வரையும் கதிகலங்க அடித்தது. கி. மு நான்காம் நூற்றுண்டில் வாழ்ந்த பிளாட்டோ என்னும் கிரேக்க தத்துவ ஞானியின் காலத்திலிருந்து கி. பி. பத்தொன்ப தாம் நூற்றுண்டில் ஆரம்பித்த மார்க்ஸ் காலத்தில் முன்வரை, மக்களின் நல்வாழ்வுக்கான ஆராய்ச்சி களனைத்தும் நம்பிக்கையான முடிவை அளிக்கவில்லை. பெரும்பகுதி வெறும் சொல்லாராய்ச்சியாகவும், வேதாந்த விசாரணையாகவும், சமாதானத்தையளிக்காத சமரச கீதமாகவும், நாட்டுக்குதவாத ஏட்டுரையாகவும் முடிந்தது.

இருட்டறையில் இன்னலுற்ற மக்கள் இன்பங் காண விழைந்த ஒவ்வொரு சமயமும் ஒடுக்கப்பட்டனர். ஆண்டை அடிமை, உயர்ந்தவன் - தாழ்ந்தவன், மதக்குரு, பக்தன், மிராசு—உழவன், பிரபு—பணியாள், முதலாளி-தொழிலாளி இவர்களிடையே ஏற்பட்ட வர்க்கப் போராட்டங்களே உலக வரலாறுகும்.

## அபாயக் குறி

ஏழ்மையைக் கண்டு உலகம் இகழ்கிறது, வெறுக்கிறது என்பது தெரிந்து, தன் ஏழ்மையை மறைக்கப் பார்க்கும் ஏழ்மையின் நிலைமை மிகமிக வேதனை நிரம்பியது. இடிந்த வீட்டுக்கு மண் பூச்சு, கிழிந்த கோட்டுக்கு ஒட்டு வேலை, சரிந்த சுவருக்கு முட்டுக் கொடுத்தல் போன்றவைகளைச் செய்யும்போது, அந்த ஏழையின் நிலைமையைக் காண்போர் இரத்தக் கண்ணீர்விட வேண்டி நேரிடும். இருக்கும் ஏழ்மையை விளக்கமாகப் பலர் அறியும்படி தெரிவித்து, அதன் மூலம் உலகின் கருணை தன்பக்கம் வரும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடையும் ஏழை, பரிதாபத்துக்குரிய சோக சித்திரம் ஏழை. பல ரகம். நிலைக்கு ஏற்றபடி.

## வீம்பு போராட்டமல்ல

வேலை நிறுத்தம் தொழிலாளியின் வீம்பு போராட்டமல்ல—ரத்தக்கண்ணீர்! அவன் வேதனைப் புயல்! விம்முதலின் எதிரொலி! வீட்டுக்குள்ளே சென்றால் பசி வேதனை. வெளியே சென்றால் அடக்குமுறை அச்சம், வீட்டுக்குள்ளே தரித்திரம், வெளியே சென்றால் அடக்குமுறை தர்பார் என்ற நிலை நாட்டில்! எனவே நெருப்போடு விளையாட தொழிலாளி பொறுப்பற்றவனல்ல. முதலாளியின் முகத்திலே இருக்கும் ஜொலிப்பும் தொழிலாளியின் வாழ்க்கையிலே காணப்படும் தவிப்பும் கண்டால் போதும் வேலை நிறுத்தத்தின் அவசியத்தை உணர.

## அந்த சக்தி

முன்பெல்லாம் தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்தால் வேலைநிறுத்தம் ஏற்பட்டால் சட்டம் சமாதானம்

ஒழுங்கு அமைதி என்ற காரணம் கூறிக்கொண்டு, அதிகாரவர்க்கம் அமுல் நடத்தும், 144 செக்ஷன் பிறக்கும்; தடியடி துப்பாக்கிப் பிரயோகம், சிறை முதலியன நடைபெறும். தொழிலாளர்கள் இவ்வளவு தாக்குதல்களைச் சமாளித்தாக வேண்டும்—முடிந்தது வெற்றிகரமாகவே முன்னேறிச் சென்றனர். அவர்கள் மீது சட்டம் சீறியபோது, அடக்குமுறை வீசப்பட்ட போது அவர்களிடம் அன்பு காட்டவும் ஆதரவு தரவும் அவர்களுக்காகப் பரிந்து பேசவும் பொது மக்கள் முன் வந்தனர். எனவே அந்த பலத்தைத் துணைகொண்டு, அதிகார வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் சக்தி தொழிலாளர்களுக்கு இருந்தது. பட்டினிக் கொடுஞ்சிறையில் இருக்கமுடியாது என்று பரணி பாடிக்கொண்டு எழுந்தனர் பாட்டாளி மக்கள். ஆதரவு திரட்டித் தந்தனர்—அனுதாபப்பட்டனர்.

## தேன் குடத்திலே தேள்!

வெள்ளைக்கார முதலாளியிடம் மட்டுமே தகராறு நடத்தலாம், நமது சர்க்கார் நடக்கும்போது கூலிக்காகவோ, உரிமைக்காகவோ வேலைநிறுத்தம்போன்ற தகராறுகளில் இறங்கக்கூடாது என்று யோசனை கூறுவது பெர்லின்வாதம்! விழிப்புற்ற தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரிடையாக நிற்பது இடுப்பொடிந்த ஏகாதிபத்தியமல்ல, முறுக்கேறிய மூலபலம் உள்ள படைப்பலம் மிகுந்த தேசியம். அன்புடன் சொந்தம் கொண்டாடி பாட்டாளிகளே வளர்த்த தேசியம், தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் இது எதிர்பாராத விபத்து! எங்கு ஆதரவு கிடைக்குமென்று அவர்கள் மனமார நம்பினார்களோ அதே இடத்திலிருந்து எதிர்ப்பு! தேடியெடுத்த தேன் குடத்திலிருந்து தேள்

கிளம்பி கொட்டுகிறது! தேசியம் நாசிசமாக் மாறுகிறது!

சிறைக்குள் தள்ளி கிளர்ச்சியை அடக்கிய எந்த வல்லரசும் வரலாற்றில் இடம் பெற்றதில்லை. பாஸிசத்தின் முதல் அடி பயங்கரமானதாகத்தான் இருக்கும். ஆனால் அதன் வீழ்ச்சி எதிர்பாராத நேரத்தில் இருக்கும். திடீரென்று சரியும்.

பொதுமக்களின் மனதை பிரசார பலத்தாலும், நியாயமான காரணங்களுக்காகப் போராடுபவர்களின் சக்தியை அடக்குமுறையாலும், முன்னதை மயக்கவும் பின்னதை முறியடிக்கவும் இன்றுள்ள ஆளவந்தார்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

## நல்ல தலைவர்கள் தேவை

உங்களைப் போன்ற நடுத்தர வகுப்பினர் உள்ளன்பு வைத்து உங்களிலேயே தக்கவரை தலைவராக ஆக்க வேண்டும். தலைவர்களை உங்களிலேயே உற்பத்தி செய்யுங்கள்.

வயலிலே ஓயாது உழைக்கின்ற விவசாயி சிந்தனை செய்ய முடியாது சிக்கலான பிரச்சினையைப்பற்றி நேரமில்லை அவனுக்கு உழைப்பு அதிகமென்பதால். ஆலையில் வேகின்ற தொழிலாளி அதிகநேரம் செலவிட முடியாது இத்தகைய பிரச்னைகளிலே. ஆனால் படித்த குமாஸ்தாக்களாகிய நீங்கள் கஷ்டப்பட்டு வேலை செய்பவர்களல்ல. உங்களுக்கு வாழ்க்கையில் ஓரளவு சௌகரியம் உண்டு. ஓய்வாக யோசிக்கமுடியும். பொறுப்பு என்ன, இன்றைய குறைகளைத் தீர்க்க வழி என்ன என்று!

ஆலைத் தொழிலாளிகளையும், வயலிலே ஓயாது உழைக்கும் விவசாயிகளையும், வண்டி ஓட்டுபவரையும், வீதிகூட்டுவோரையும், சிறு கடைத் தொழிலாளரையும், கட்டை வெட்டுவோர் போன்ற எல்லா வகை தொழிலாளர்களையும் பற்றி கவலை கொண்டு ஒன்று திரட்டி நீங்களே நடத்தலாம். விஷய விளக்கமும் தரலாம். அறிந்திருப்போர் அறியாதவருக்கு அறிவித்தல் நல்லது. தெரிந்திருப்போர் தெளிவில்லாதவர்க்கு தெளிவுபடுத்தலாம். பற்பல பிரச்சனைகளைப் பற்றியும் உங்களை நீங்களே காத்துக் கொள்ளும் நிலை பெற்றால் பிற அரசியல் சூதாட்டக்காரர்களுக்கு வேலை ஏது உங்களிடம்!

## ஏழ்மை நீங்க

நாட்டின் பொதுமக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நாட்டின் வளத்தையும் செல்வத்தையும் நல்லறிவாளர்களின் மனத்தையும் திறத்தையும் அத்துடன் மேல்நாட்டார் அளித்துள்ள விஞ்ஞானத்தையும் துணைகொண்டு இயற்கை வளத்தை பயன்படுத்தி நல்லதொரு திட்டம் தீட்டப்பட்டு மக்கள் மன்றத்தில் வைத்திருந்தால் நாட்டிலே இன்று பேசப்பட்டுவரும் அளவுக்குப் பொதுவுடைமைப் பிரசாரம் தேவைப்பட்டிராது. நடைபெறும் அளவுக்கு நாடும் நலிந்திராது என்பது நிச்சயம்; ஏழ்மை நிலை வளர்ந்திருக்காது வளம் மிகுந்திருக்கும்.

## அண்டப்புளுகன்

ஒருவன் தன்னை ஓவியன் என்று கூறிக்கொண்டு, ஒரு வெள்ளைத்தாளைக் காட்டி, "பார், பசுவும் புல்லும் என்ற படம் இது" என்றானாம். புல்லா காணோமே

என்றுனும் காகிதத்தைப் பார்த்தவன். புல் எப்படித் தெரியும், அதைத்தான் பசு மேய்ந்து விட்டதே என்றுன் ஓவியன்! அப்படியா! சரி பசு எங்கே, அதையும் காணுேமே என்று கேட்டதற்கு துணிந்து பதில் சொன்னுனும் ஓவியன்; புல்லேத் தின்ற பசுவை அடித்து விரட்டிவிட்டார்கள்; அதனுல்தான் படத்திலே பசு தெரியவில்லே என்று அந்த ஓவியன் சொன்னுனும்.

## மாமியார் வீட்டு விருந்து!

ஒருவன் கேழ்வரகு களியைத் தினந்தோறும் சாப்பிட்டு வந்தானும்! கேழ்வரகு மீது வெறுப்பு ஏற்பட்டு இன்ருவது நல்ல உணவு சாப்பிடுவோம் என்று மாமியார் வீட்டுக்குச் சென்ருனும்!

"மாப்பிள்ளே வந்திருக்கிருர். நாள்தோறும்தான் சோறு சாப்பிடுகிறேமே, வயலிலே கேழ்வரகு அறுவடையாகி இருக்கின்ற சமயம்—இந்த நேரத்தில் நாம் கேழ்வரகு கிளறி மாப்பிள்ளேக்கு போடுவோம்!" என்று சாப்பிட வைத்தாளாம்!

அதைப் பார்த்த மாப்பிள்ளே இங்கேயும் இதுதானு என்று அலுத்துக் கொண்டானும்!

அது போல இங்கே சில பாட்டுக்கள் காதில் விழும்—நாடகக் காட்சிகளேக் காணலாம் என்று வந்தால், இங்கேயும் இதுதானு என்று தோன்றுகிறது.

நல்ல விளேச்சலேத் தருகின்ற வயலுக்கு உரம் போடுவதைப் போல்—வண்டியிலே பூட்டப்பட்ட மாடு

களுக்கு மேய்ச்சல் தேவைப்படுவதுபோல் மனிதனுக்கு ஓய்வு தேவை!

எந்திரத்திற்குக் கூட ஓய்வு தேவைப்படுகிறது!

## மனைவியும் பொம்மையும்

ஒரு வீட்டில் மனைவி ஒரு மரப்பொம்மை வைத்து தினந்தோறும் பூஜை செய்து வந்தாள். அவள் அப்படி பொம்மையை வைத்து எப்பொழுதும் பூஜை செய்து கொண்டிருப்பதைக் காண மாமியாருக்குச் சகிக்க வில்லை. அதைத் தன் மகனிடம் சொல்லி கண்டிக்கச் செய்தாள். அந்த மகன் மனைவியை அழைத்து நீ இனி இந்த பொம்மைகளைத் தொடக் கூடாது என்று சொல்லி பொம்மையை எடுத்து வீசி எறிந்தான்; அதைக் கண்ட அந்த மனைவி 'நான் அந்த பொம்மையை விடமாட்டேன். கணவனைப் பிரிந்தாலும் பொம்மையை விட்டுப் பிரிய மாட்டேன்' என்று கூறி அந்தப் பொம்மையை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினாள். போகிற நேரத்தில் பொழுது சாய்ந்து விட்டது. வழியிலே காடாக இருந்ததாலே ஒரு மரத்திலேறி உட்கார்ந்து பொம்மையையும் வைத்துக்கொண்டு மரக் கிளையில் சாய்ந்து கொண்டிருந்தாள். நள்ளிரவு வந்தது; சில திருடர்கள் எங்கோ திருடிய பொருள்களைக் கொண்டு வந்து அந்த மரத்துக்குக் கீழே வைத்துக்கொண்டு பங்கு பிரித்துக் கொண்டிருந்தார்கள். மேலே மரக்கிளையில் அமர்ந்திருந்த அந்தப் பெண் மணிக்குத் தூக்கம் வந்துவிட்டதால் அவள் கையிலிருந்த பொம்மை நழுவி திருடர்கள் தலையில் விழுந்தது. உடனே அவர்கள் திடுக்கிட்டு மேலே ஏதோ குட்டிச் சாத்தான் இருந்து கொண்டு இந்த பொம்மையைப் போடுகிறது என்ற மூட நம்பிக்கையால் பயந்து ஓட்டம்

எடுத்தார்கள். பொழுது விடிந்ததும் அவள் மரத்தி லிருந்து கீழே இறங்கி வந்து பார்த்தாள். அங்கு ஏராள மான தங்க நகைகள் இருப்பதைக் கண்டாள். அவற்றை எல்லாம் எடுத்துக்கொண்டு வீடு திரும்பி ஞள். வீட்டிலே இருந்த கணவனுக்கு மனைவி பிடிக்கா விட்டாலும் மனைவி கையிலே இருக்கின்ற பணம் பிடிக் கும் என்ற காரணத்தால் அன்புடன் வரவேற்ருன்; கோபம் தெளிந்தது. இந்தச் செய்தி மெள்ள அடுத்த வீட்டு மருமகளுக்கும் எட்டிவிட்டது. அவள் தனக்கும் இப்படிப் பொருள் கிடைக்கும் என்ற பேராசையால் தானும் ஒரு பொம்மையை வைத்து பூஜை செய்து தனது மாமியாரிடம் சொல்லி கோபிக்கச் செய்து தன் கணவனை தன்னை வீட்டை விட்டுத் துரத்தச் சொல்லி, அதன் பிறகு அந்தக் காடு பக்கமாக சென்று இருட்டும் வேளையிலே மரத்தின் மீது ஏறி சாய்ந்துகொண்டு தூங்குவதற்கு முயற்சித்தாள். ஆனல் தூக்கம் மட்டும் வரவில்லை. பணம் கிடைக்கப்போகிறது என்கிற சிந்த னையில் இருப்பவளுக்கு எப்படி தூக்கம் வரும். நள்ளிரவு வந்தது. முன்போலவே அந்தத் திருடர்களும் அந்த மரத்தடிக்கு வந்தார்கள். அந்த நேரத்தில் அவள் பொம்மையைக் கீழே போட்டாள். உடனே அந்தத் திருடர்கள் அந்தப் பொம்மையை எடுத்துப் பார்த்து யோசித்தார்கள். மேலே இருப்பது பேயும் இல்லை பிசாசும் இல்லை. மனித உருவமாகத்தான் இருக்க முடியும் என்று முடிவு செய்து மரத்தின்மீது ஏறி அந்தப் பெண்ணைப் பிடித்துக் கீழே இழுத்து வந்து நன்ருக உதை கொடுத்து அனுப்பி வைத்தார்கள். பணம் கிடைக்கும் என்று சென்ற மருமகள் உதை பெற்று திரும்பி வருவதை அறிந்து மாமியாரும் அவள் கணவனும் ஏமாந்தார்கள்,

## அஞ்சுகம் ஆலயத்துக்கு வா!

பக்தியுள்ள கணவன் ஒருவன் தன் மனைவியைப் பார்த்து 'அஞ்சுகம் ஆலயத்துக்கு வா!' என்று சொன்னதும் நெற்றியிலே குங்குமம் இட்டு நேர்த்தியான புடவை கட்டி கூந்தலிலே பூச்சூடி மகவைக் குளிப்பாட்டித் தூக்கிக்கொண்டு புறப்படும் மனைவியைப் பார்த்து கணவன் பூரிப்படைவான். அதுவன்றி 'அஞ்சுகம், ஆலயத்துக்கு வா!' என்ற குரல் கேட்டதும் கையிலிருந்த சாணிச் சட்டியை அப்படியே வைத்து விட்டு கையைக்கூட கழுவாது முந்தானைத் தலைப்பில் துடைத்துக்கொண்டு அழுகின்ற குழந்தையைக்கூட அமர்த்தாது 'ஆலயத்துக்குத்தானே! வாங்க போகலாம்' என்று கூறி புறப்படும் மனைவியைப் பார்த்து கணவன் சொன்னான். "அடி அஞ்சுகமே! உனக்கு எல்லாம் பொருந்தியிருக்கிறது ஆனால் குடும்பப் பெண்ணுக்குள்ள இலட்சணம்தான் இல்லை" என்று மனம் நொந்து கொண்டிருக்கும்போது, நீங்கள் கைகழுவச் சொன்னால்தானே, தலை சீவி, பூச்சூடி பொட்டிட்டு வரச் சொன்னால்தானே என்று ஒவ்வொன்றிற்கும் கணவனுடைய சம்மதத்தை மனைவி கேட்டாளாம்.

## தாயின் வீரம்

கம்பங்கூழ் காய்ச்சிக் கொண்டிருக்கிறாள் ஒரு தாய்; கூடத்தில் தொட்டிலில் படுத்திருக்கும் அவள் குழந்தை. அப்போது, வீட்டுக்குள் சிறுத்தைப் புலி ஒன்று நுழைந்து விட்டால் கூழ் காய்ச்சிக் கொண்டிருக்கும் தாய், 'வந்திருப்பது புலியாயிற்றே! அதற்குக் கூரிய நகங்களும், கொடிய கோரைப் பற்களும் உண்டே' என்று எண்ணி பயந்து, வாளா விடுவதில்லை. தான் பெண் என்பதையும் வந்திருப்பதை புலி என்பதை

யும் மறந்து ஓடோடியும் வந்து, தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையைத் தூக்கிக் கொள்வாள். சிறுத்தைப் புலி பாய்ந்தாலும் அதை எதிர்த்துப் போராடிடுவாள்—கையில் கிடைத்ததைக் கொண்டு!

## ஆண்டவன் ரகசியம்

ஆதி காலத்தில் மனிதன் ஓயாத அலைகளைப் பார்த்தான். அதன் சீற்றத்தால் நாடு அழிந்ததைக் கண்டான்; கடும் புயல் வீசி பெருமரங்கள் சாய்வதைக் கண்டான்; இடி இடித்து அதன் ஓசையால் புற்றுக்குள் இருக்கும் நாகமும், புதரில் மறைந்திருக்கும் புலியும் நடுநடுங்கி ஓடுவதைப் பார்த்தான். ஏன் இவைகள் ஏற்படுகின்றன என்று அவனுக்குப் புரியவில்லை. இது விளங்காததால் அவனுக்கு அச்சம் ஏற்பட்டது. ஏன் என்று புரியாமல் அச்சத்துடன் திகைத்து நின்ற அந்த மனிதனின் முன்னே ஒரு எத்தன் நின்றான். 'அவை என்ன தெரியுமா? அதுதான் ஆண்டவன் செயல்' என்று அந்த எத்தன் கூறினான். அந்த ஆதி மனிதன் முன்னே நின்ற எத்தன்தான் உலகிலே முதலில் தோன்றிய புரோகிதன். அச்சத்திலே ஏற்பட்டதுதான் ஆண்டவன் தத்துவம்.

பொங்கும் அலைகள் பூந்தோட்டத்தை அழிப்பதையும், தென்றல் புயலாக வீசி வேதனை தருவதையும் கண்டு அது ஆண்டவன் செயல் என்று அஞ்சிய மனிதன் ஆண்டவனைத் தொழ ஆரம்பித்தான்.

ஆண்டவன் ரகசியம் உனக்குத் தெரியுமா? உனக்குத் தெரியக் கூடாது தெரிந்தால் உன் தலை சுக்கல் சுக்கலாக உடையும்; அது எனக்கு மட்டுமே தெரிய வேண்டும் என்று அந்த எத்தன் கூறினான்.

## அலைகடலே அடங்கு!

இங்கிலாந்து நாட்டில் கென்யூட் என்ற மன்னன் இருந்தான். அவனைச் சுற்றியிருந்தவர்களெல்லாம், அந்த மன்னனை அளவு கடந்த முகஸ்துதி செய்து வந்தார்கள். 'மன்னன், ஆணைக்குக் கடல் அலைகூட அடங்கும்' என்று அவர்கள் முகஸ்துதி செய்து வந்தார்கள். அந்த மன்னன் ஒருநாள், தன் சிம்மாசனத்தைக் கடலுக்கருகில் கொண்டுபோய் போடச் செய்து அதில் அமர்ந்துகொண்டு, தன்னை யார் பாராட்டி முகஸ்துதி செய்து வந்தார்களோ அவர்களையெல்லாம் அழைத்து அருகில் வைத்து, 'நான் சொன்னால் அலை கடல் அடங்குமா?' என்று கேட்டான். 'ஆம் மன்னா; நீங்கள் சொன்னால் அலை கேட்கும்' என்றார்கள்; உடனே மன்னன், 'அலையே அடங்கு' என்று கட்டளையிட்டான். பெரிய அலையாக வந்து கொண்டிருந்த அலை, வரவரச் சிறுத்து கிட்டே வந்ததும் மறைந்து விட்டது. அடுத்து, தூரத்தில் ஒரு பெரிய அலை வந்து கொண்டிருந்தது; அதுவும் கிட்டே வந்ததும் அடங்கி விட்டது. உடனே அவர்கள், 'பார்த்தீரா மன்னா! அலை அருகில் வந்ததும் அடங்கிவிட்டது' என்று சொன்னார்கள் மன்னன் அவர்களைப் பார்த்து, 'அதோ, தூரத்தில் வருகிற அலை அடங்குமா?' என்று கேட்டான். 'அடங்கும்' என்றார்கள். உடனே மன்னன் ஆணையிட்டான்; ஆனால், அது அடங்கவில்லை. பின்னர் மன்னன் சொன்னான். 'நீங்கள் வெறும் முகஸ்துதிக்காகவே இப்படியெல்லாம் என்னிடம் சொன்னீர்கள் என்பதை அறிவேன்; உண்மையில், அரசன் ஆணை பிறப்பித்தாலும் அலைகள் அடங்காது'' என்று கூறினான். மன்னன் கூறியதைக் கேட்ட அவர்கள் வெட்கித் தலை குனிந்தார்கள்.

## தீயிலே மடிந்த சிறுவன்!

கசபியான்கா என்ற சிறுவன் தன் தந்தையோடு கப்பலில் சென்றான். கடல் நடுவே கொடிய கப்பற் சண்டை நடந்தது; கசபியான்காவின் தந்தையும் ஒரு கப்பல் தலைவன். அவன் தன் மகனைக் கூப்பிட்டு ஓரிடத்தில் நிறுத்தி, "குழந்தாய், நான் அழைக்குமளவும் இவ்விடத்தைவிட்டு நகராதே" என உரைத்து ஏதோ அலுவலாக அப்பாற் சென்றான். சிறுவன் கசபியான்கா நல்ல பிள்ளை - தந்தை சொல் தட்டாத தனயன், கடமையை உணர்ந்த பாலன். சண்டையில் தந்தை உயிர் நீத்தான். இது இச் சிறுவனுக்குத் தெரியாது; திடீரென்று கப்பல் தீப்பிடித்துக் கொண்டது; கப்பலில் உள்ளவர் யாவரும் பலவற்றாலும் உயிர் தப்பி ஓடினர்; பாலன் கசபியான்காவைப் பலர் அழைத்தனர். அவன் போக மறுத்தான். தீ நாற்புறமும் அவனைச் சூழ்ந்து கொண்டது; அதுகாலை பலரும் அவனை அழைத்தனர், உடன் வருமாறு. அவன் தான் தந்தையின் கட்டளையை மீறி நடக்க முடியாதென உறுதியாகக் கூறி விட்டான். அனைவரும் போய் விட்டனர். கசபியான்கா, "தந்தாய்! தந்தாய்! நான் போகலாமா? போகலாமா?" பன்முறை கூறினான். தகப்பன் உயிரோடிருந்தாலல்லவா பதில் கிடைக்கும்? எனவே தந்தை சொல்லை தலைமேற்றாங்கி அவ்விடத்திலேயே நின்று சிறுவன் கசபியான்கா தீயிலே மடிந்தான்.

## அம்மையார் விருந்து!

"நண்பர்களே! என் அழைப்பிற்கு இணங்கி நீங்கள் இந்த விருந்திற்கு வந்து என்னைக் கௌரவப் படுத்தியதற்காக என் மனமார்ந்த வணக்கத்தைத்

தெரிவித்துக் கொள்கிறேன். வாருங்கள் விருந்து மண்டபம் செல்வோம்'' என்று அந்த அம்மையார் விருந்தினரை அன்புடன் அழைத்தார். சுவையுள்ள விருந்துக்கு முன்பு மதுர மொழியும் பெற்றோம் என்று மகிழ்ந்தனர் விருந்தினர், மண்டபம் புகுந்தனர். பெரிய மேஜை எதிரிலே வரிசையாக நாற்காலிகள், விருந்து காலத்துக் கேற்ற தட்டுகள், கோப்பைகள், யாவும் ஒழுங்காக இருந்தன. அமர்ந்தனர், மகிழ்வுடன் உண்ணத் தொடங்கினர், மிரண்டனர்! ஏன்? தட்டுகள் யாவும் காலியாகக் கிடந்தன. பண்டமில்லை, பானம் இல்லை, தட்டும் கோப்பையும் இருந்தன.

விருந்துக்கு அழைத்த அம்மையார், "நண்பரீர், இவ்விருந்தின் நோக்கம் யாதெனில், போரிலே சிக்கி அவதிப்படும் ஐரோப்பாவிலே இதுபோது பெரும்பாலான இல்லங்களிலே இப்படித்தான் சாப்பாட்டு நேரத்திலே வெறும் தட்டுகளைக் கண்டு, கலங்கும் நிலை இருக்கிறது. அந்தப் பட்டினியை உணர்த்தவே இந்த விருந்து நடத்தினேன். நாம் விருந்துக்கு வந்தோம், உண்ணவில்லை ஒன்றும் இல்லாததால். இதுபோல் இலட்சக்கணக்கான மக்கள் உணவின்றித் தவிக்கின்றனர். இந்தக் கஷ்டத்தைப் போக்க நம்மால் ஆன உதவி செய்ய வேண்டும் என்று உங்களைத் தூண்டவே இந்த விருந்து ஏற்பாடு செய்தேன்'' என்றுராம் விருந்துக்கு அழைப்பு விடுத்த அந்த அம்மையார்.

★

## Mr. V. V. GIRI

*The President of India*

A person of cheerful disposition, 'Anna' a popular figure, was adored for his great qualities of head and heart. He had the pulse of the people and was always concerned with the improvement and well-being of the common man.

A forceful orator, Anna was an outstanding parliamentarian.

## Mrs. INDIRA GANDI

*Prime Minister of India*

Mr. Annadurai gave Tamilnadu a dedicated leadership and made a valuable contribution to the evolution of of harmonious relations between the centre and the state.

It is tragic that death has taken him from us when he had so much to give to the people.

The nation mourns a man of wisdom whose high sense of duty earned him widespread respect.

## RAJAJI

I woke up after midnight, to hear the sad news.

I am grieved beyond words.

## Mr. K. KAMARAJ

It is regrettable that Annadurai's sustained service is lost for Taminadu. His death is a great loss to Tamilnadu.